00

REGD No: M 1530.

"BALAVINODHINI"

LDREN'S FRIEND

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்

ஆசிரியர்:
வரகவி திரு. அ. சுப்பிரமணிய பாரதி

Vol. XII DEC. 30. No 12

PRINTED AND PUBLISHED
BY
V. RAMASWAMY SASTRULU & SONS
323, Tiruvottiyur High Road
Tondiarpet, MADRAS.

N. B:—The Subscribers are requested to pay subscriptions to our agents only on obtaining our *Bonafide* receipts.

All Rights Reserved by the Publishers.

பாலவிநோதினி

CONTENTS—பொருளடக்கம்

	பக்கம்.
தெய்வ வணக்கம்	529
ஹிதோபதேசம்	530—534
திருக்கழுக்குன்றம்	535—540
இரமாப்பு இடர்ப்படுத்தம் ...	541—542
ஒரு பழங்கதை	543—546
மோர்	546
செடி விநோதம்	547—548
திருடர்களும் கழுதையும்	549
எமனும் திருப்தியற்றவனும் ...	550
ஜப்பானில் பாய் பின்னுதல் ...	551—553
தர்மம் செய்யாமல் பணம் சேர்க்காதே	554—555
செய்கைக்குத்தக்க பயன் ...	556
உத்தமமான தொழில்	557—559
முத்துதாண்டவர் கீர்த்தனம் ...	560
பெண்களுக்கு இன்சொல் ...	561
ஹாஸ்யம்	562—564
மதுக்குடி ஒதுக்கு குடும்ப மதுவிலக்கு சாஸ்திரம் போதிப்பது ...	565—566
சுகாதாரம்	567—568
கொடியபாவம்	569—570
பழமொழிகள்	570
ஸ்ரீபகவானுடைய திருநாம வைபவம்	571—573
இந்துநேசனின் இவ்வருஷ அனுபந்தம்	574
புத்தகவரவு	575—576

சுபத்தைத் தரும் வெகுமானங்கள்

ஒச்சமில்லாத இரத்தினங்களை அமைத்துச் செதுக்கிய நகைகளைத் தரிப்பவர்களுக்கு அவ்விரத்தினங்கள் வெகு சுப பயன்களைக் கொடுக்கும் என்று பழைய காலத்திலிருந்து நமது பெரியோர் நம்பி வருகிறார்கள். அவ்விதமான ஆபரணங்களையே நமது நாட்டாருக்குக் கொடுக்க வேண்டுமென்னும் விருப்பமொன்றே ஆதிகாலததிலிருந்து எங்கள் கருத்து. ஆகையால் 36 வருஷத்திற்கு முன் நாங்கள் இந்த வியாபாரம துடங்கியது முதல ஒச்சமில்லாதவையும் உயர்ந்த நீரோட்ட முள்ளவையுமான இரத்தினங்களை பதித்த நகைகள் விற்று வருகிறோம். எங்கள் நகைகள் இம்மாதிரியானவை என்று நாங்கள் உத்திரவாதமாயிருப்பதுதான் எங்களிடம் நகை வாங்குபவர்களுக்கு முழு ஜாமீனாகும்.

வைர வியாபாரத்தில் நாங்கள் இவ்வளவு பெருமையடைந்ததற்குக் காரணம் என்னவென்றால், நமது நாட்டாருடன் நம்பிக்கையாயும் குற்றமின்றியும் வியாபாரம் செய்து வருவதேயாம்.

ஆகையால் எங்களிட மிருக்கும் கைதேர்ந்த வேலைக்காரரின் உதவியை நீங்கள் பெற்றுக் கொண்டு, அதனாலுண்டாகும் நற்பயன்களை நீங்கள் அனுபவிப்பதே உங்களுக்கு லாபகரமான வேலை.

சுராஜ்மல் லல்லூபாய் அண்ட் கோ,
நகை வியாபாரிகளும், உயர்ந்த வெள்ளி
சாமான்கள் செய்பவர்களும்,
313, எஸ்பிளநேட், மதருஸ்

மணித் தைலம்

ஆயுர்வேத முறைப்படி தயார் செய்யப்பட்ட கூந்தல் தைலம். மண்டையை குளிர்ந்திருக்கச் செய்து, தலைமயிரை உதிராமற் தடுத்து பளபளப்பாயும் நீளமாயும் வளரச் செய்யும்.

5-துலாம் தைலம் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1.

இனாம் இனாம்

போஜன விதிகள்.

ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய புஸ்தகம். விலாஸத்தை தெரிவியுங்கள். இனாமாக தபால் செலவின்றி அனுப்புகிறோம்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

வால்மீகி ராமாயண வசனம்.

வால்மீக ராமாயணத்தை ஸம்ஸ்கிருதத்திலிருந்து சரியாகத் தமிழில் மொழிபெயர்த்து அச்சிடப்பட்டிருக்கிறது. ஸம்ஸ்கிருத ஸ்லோகங்கள் சங்க்யையை இன்ன சுலோகங்களின் மொழிபெயர்ப்பென்று அறிய பாராக்கள் இலக்கம் கண்டிருக்கிறது.

பாலகாண்டம்	...	1	0	0
அயோத்தியா காண்டம்	...	2	4	0
யுத்த காண்டம்	...	3	0	0

மற்ற காண்டங்கள் அச்சிலிருக்கிறது. சீக்கிரத்தில் வெளிவரும்.

V. RAMASWAMY SASTRULU & SONS,
292, Esplanade, Madras

FEDERATED INDIA

(An All—India English Weekly)

PUBLISHED EVERY WEDNESDAY

Annual Subscription Rs. 5.

PLEASE APPLY TO:—
THE MANAGER,
'FEDERATED INDIA,'
TONDIARPET, MADRAS.

THE LAW OF ELECTION

BY

K. L. NARASIMHA RAO,

Advocate, High Court, Madras.

Contains all the Acts, Rules, Regulations, and Forms, brought up-to-date regarding Elections to every Statutory Body from the Village Panchayat to the Council of State. Indispensable to every public worker and practitioner.

Price Rs. 3-8-0. *(Postage Extra.)*

"SRI RAMA PRESS" *3, Sivaramulu Chetty St., Tondiarpet, MADRAS.*

வாசிப்பதற்கு இனிமையானதும் நற்புத்தி புகட்டக்கூடியதுமான இப்புத்தகம், தேவையுள்ளவர்கள் இன்றைக்கே தருவித்து வாசியுங்கள்.

ராஜ வைத்திய

நாராயணஜீ கேசவஜீ,

நெ. 1/94, சைனு பஜார் ரோட். சௌகார்பேட், மதராஸ்.

Moral class reading books for the young

BY

Varakavi Tiru: A SUBRAMANYA BHARATI

	ரூ.	அ.	ப.
இராமாயண இரகசியம்	0	12	0
ஸ்ரீராமச்சந்திரன் — நல்ல பிள்ளை	0	2	6
பரதன் — நல்ல தம்பி	0	3	0
ஸீதாதேவி — நல்ல மனைவி	0	4	0
குகன் — சிறந்த நண்பன்	0	2	6
மாருதி — நல்ல அடிமை	0	2	6
விபீஷணன் — சிறந்த பக்தன்	0	1	6

For Copies, please apply to :—

BALAVINODINI OFFICE,

323, Tiruvottiyur High Road, MADRAS.

MADAN MANJARI PILLS

பூலோக அமிர்தமென்று புகழப்படுகின்ற இம்மாத்திரை அஜீரணம், மலசிக்கல், ரத்தக் குறைவு இவைபோன்ற சாதாரண வியாதிகளையும், நரம்புத் தளர்ச்சி நபும்சகத்துவம், இவைபோன்ற விசேஷ வியாதிகளையும் நீக்கி இளமையைக் கொடுப்பதில் நிகரற்றது.

40-மாத்திரைகள் அடங்கிய டப்பியின் விலை ரூ. 1 0 0

மதன் மஞ்சரி ஆபீஸ், 1/94, சைனு பஜார் ரோட், மதராஸ்.

எங்கும் புகழ்பெற்ற

பி. வி. ராஜன் பட்டணம் பொடி



காரம், மணம், குணம், நிறம், வாசனை முதலிய எல்லாவற்றிலும் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி வீசை 1-க்கு விலை ரூபா 4. ஷை சாதா ரகம் பொடி வீசை 1-க்கு விலை ரூபா $3\frac{1}{2}$.

டாக்டர் B. S. மல்லையா M.B., & C.M., & M.L.C. அவர்களால் பரிசோதிக்கப்பட்ட

R. S. சுகந்த மூக்குத்தூள்:

விலை பாடில் 1-க்கு அணு 4. டஜன் 1-க்கு ரூபா 2 4 0 ஷை ஒரு சேர் டின் 1-க்கு ரூபா. 1 12 0 விபரங்களுக்கு எழுதவும். வி.பி. ரயில் சார்ஜ் வகைரா பிரத்யேகம்.

விலாசம்:—பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,

நெ. 44, கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.

தந்தி விலாசம் "நஸ்யம்"

மதனகாமேஸ்வர லேகியம்

இது மிக்க பலமும், வீரியவிருத்தியு முண்டாக்குவதில் மிக்க சிரேஷ்டமானது. மேகம், வெட்டை, பலயீனம், சுக்கிலநஷ்டம், நீர் வியாதி முதலான நோய்களை நீக்கி பலமும், காந்தியும், சம்போகசக்தியும், சந்தானபிராப்தியு முண்டாக்குவதில் நிகரற்றது.

இரண்டு டப்பிகள் போதுமானது.

20 தோலா டப்பி 1-க்கு ரூபா	1	4	0
வி.பி. சார்ஜு	0	6	0

பி. சி. ஏ. அண்ட் கம்பெனி,

ஆயுர்வேத சமாஜம், பெரிதேபி, நெல்லூர் ஜில்லா.

ஸ்ரீ மகாபாரத வசனம்.

பாரதப் பிரசங்கி யென்று பெயர் பெற்றவரும் வித்வசிரோமணி யெனச் சிறப்புற்றவருமாகிய ஆ. சண்முகக் கவிராயரவர்கள் இயற்றியது. பாலவிநோதினிப் பத்திரிகாசிரியர், வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதி யவர்களால் பரிசோதிக்கப் பெற்றது. நல்ல உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் வெகு நேர்த்தியாய் அச்சிடப்பெற்றது இதுவரையில் இதுபோன்ற பதிப்பு வெளிவந்ததே கிடையாது. கலாசாலைக்கும் லைப்ரெரிக்கும் உபயோகப்படக்கூடிய சிறப்புடையதாய்க் கெட்டி கலிகோபயிண்டு செய்தது.

சண்முகக் கவிராயரவர்களுடைய வசனநடை நல்ல பாஷாஞானத்தையும், சிறந்த வாக்கையும் கொடுக்கக்கூடிய தென்பதும் பாமரருக்கும் எளிதில் விளங்கக்கூடிய தென்பதும் தமிழ் மக்களின் பெரும்பான்மையோர் நன்குணர்வர்.

பாரதம் இதிகாஸ ரத்தினமென்றும் ஐந்தாவது வேதமென்று புகழத்தக்க பெருமை யுடையதென்றும் அதிலில்லாத நீதிகளே கிடையா வென்றும் ஆஸ்திக புத்தியைக் கொடுத்து ஒழுக்கத்தில் நிலை நிறுத்தக்கூடிய போதனைகளை அளிக்கக்கூடியதென்றும் பெரியோர்கள் கொண்டாடப்படுவ தாகையினால் தமிழ் நாட்டில் ஒவ்வொருவருடைய வீட்டிலும் மக்கள்கையில் பூஷணமாக விளங்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

	ரூ.	அ.	பை.
1. ஆதிபர்வம்	3	0	0
2. சபாபர்வம், ஆரண்யபர்வம், விராடபர்வம் இவை மூன்றும் சேர்ந்து ஒரேபயிண்டு விலை ரூபா ...	5	0	0
3. உத்தியோகபர்வம்			
4. பீஷ்மபர்வம், துரோணபர்வம், கர்ணபர்வம், சல்லியபர்வம், சவுத்திகபர்வம், ஸ்ரீபர்வம், சாந்திபர்வம், அநுசாசனிகபர்வம, அசுவமேதபர்வம் ஆசிரமவாசபர்வம், முசலபர்வம், மகாப்ரஸ்தானிகபர்வம், சோர்க்காரோகணபர்வம் இவை பதின்மூன்றும் ஒன்று சேர்ந்தது. ஒரே பயிண்டு. இது அச்சிலிருக்கிறது. விலை.	5	0	0

இவ் வால்யூம்களை சேர்ந்தாற்போல் ஒரே காலத்தில் வாங்குகிறவர்களுக்கு விலை ரூபா 12-8-0.

வாவிள்ள ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்டு ஸன்ஸ்,
292, எஸ்பிளனேட், மதருஸ்

தமிழ் பாலபோத இலக்கணம்.

இந்த இலக்கணம், சுமார் அறுபது வருஷங்களுக்கு முன் சிறந்த இலக்கண வித்துவானாக விளங்கிய விசாகப் பெருமாளையரவர்கள் இயற்றியது. சூத்திரங்களெல்லாம் இனிய வசன நடையில் பாலர்கள் எளிதில் தாமே படித்து உணரக்கூடிய முறையில் விரிவாயும் பல உதாரணங்களுடனும் விளக்கப் பட்டிருப்பது இதற்குள்ள சிறப்பாகும். பால விநோதினிப் பத்திரிகாசிரியர். வரகவி - திரு - அ. சுப்ரமண்ய பாரதியவர்களால் பழைய பிரதிக்கிணங்க நன்கு பரிசோதிக்கப் பெற்றது. பள்ளிக்கூட மாணவர்களுக்கும் தனியே தமிழ்ப் பாஷையில் தேர்ச்சிபெற விரும்பிப் படிப்பவர்களுக்கும் இந்த நூல் சாலப் பயன்படக்கூடியதாகையினால் இதனை உயர்ந்த காகிதத்தில் வெகு நேர்த்தியாய் அச்சிட்டிருக்கிறோம். கலாசாலைத் தலைவர் இதனைத் தங்கள், பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குப் பாடப் புத்தகமாகவேனும் பள்ளிக்கூட லைப்ரெரிக்கேனும் உபயோகப் படும்படி சிபார்சு செய்வார்களானால் அது பேருபகாரமாகும்.

விலை ரூ. 1—0—0

வாவிள்ள ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்டு ஸன்ஸ்,
292, எஸ்பிளனேட், மதருஸ்.

தமிழ் நூல்கள்

உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் பிழையில்லாமல் அச்சிடப்பட்டவை.

	ரூ.	அ.	பை.
திருக்குறள் விளக்க நூல்கள் (குறிப்புரையுடன்).			
திருக்குறள் (பரிமேலழகர் உரை பாகெட் சைஸ்)	2	0	0
திருக்குறள் மூலம் (காலிகோ பைண்டு) பாகெட் சைஸ்	0	6	0
வெண்பாக்கள்.			
சிவசிவவெண்பா (குறிப்புரையுடன்) ...	0	2	0
சோமேசர் முதுமொழி வெண்பா ...	0	2	6
இரங்கேச வெண்பா	0	2	0
ஆத்திசூடி வெண்பா	0	1	6
திருத்தொண்டர் வெண்பா	0	1	6
திரட்டு நூல்கள்.			
திருவருட்பா	0	6	0
திருப்புகழ்	0	2	0
பட்டினத்தார் திருப்பாடற்றிரட்டு ...	0	3	0
தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு ...	0	4	0
தேவாரத் திருமுறைத் திரட்டு	0	10	0
இலக்கணமும், நிகண்டும்.			
நன்னூல் மூலம்	0	3	0
நேமிநாதம்	0	2	0
புறப்பொருள் வெண்பா மாலை	0	7	0
பதினோராவது நிகண்டு	0	6	0
சேந்தன் திவாகரம்	0	2	0
பாலபோத இலக்கணம் (விசாகப் பெருமாளையர்)	1	0	0
வசன நூல்கள்.			
ஆன்றோர் சரித்திரம் (எம். வி. ஈஸ்வரய்யர்) ...	0	5	0
கதாமஞ்சரி	0	4	0
ஜீவகாருண்ய ஒழுக்கம்	0	4	0
மனுமுறைகண்டவாசகம்	0	5	0

வாவில்ள ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்டு ஸன்ஸ்,
292, எஸ்பிளனேட், மதறாஸ்.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 12 | 1930 ஞு டிசம்பர் மாதம் | பகுதி 12

தெய்வ வணக்கம்

சீதரன துககமல விழிமல ருதித்து வளர்
தெய்வானை வள்ளி யிருபால்
சேர்ந்தொளிர வெற்றிவடி வேல்கொண்டு நட்டமிடு
சித்ரக் கலாப மயிலில்
தாதவிழ்ந் தலர்மலர்ச் சோலைசெறி சோலைமலை
தணிப்பரங் குன்றேரகம்
தணிகாசலஞ் செந்தில் முதலான தலமெலாம்
தங்கிவிளையாடு மமலா
நாதனிலை வேறு நீ யாண்டருள்செ யென்றுன்னை
நம்பித்துதிக்க வந்நான்
நற்றமிழ்க்கவி வல்ல வீரனைச் சிறைமீட்ட
ஞானப்ரகாச வொளியே
பாதமலரன்றியோ ராதரவு காண்கிலேன்
பாதுகாத் தருளண்ணலே
பழமறைக டருசில மழவிடைய ரருள்பால
பழனிமலை முருகேசனே

(பாரதி)

ஹிதோப தேசம்

(1) "காரியம் பிரதானமேயன்றி வீரியம் பிரதான மன்று"—என்று பழமொழி கூறுவதுண்டு. ஆகையினால் ஒரு செய்கையை மனத்திற்குள் எண்ணினால் அது எவ்வாறேனும் முடியும் வழியைத் தேர்ந்துணர்ந்து பின்பு அதனைச் செய்துமுடித்து அப்பால் வீரம் பேசவேண்டுமே யன்றி முடியாததன் முன் பேசுவது வீண் பிதற்றலாகும். அது அவமானத்திற்குள்ளாக்கும்.

"செய்கையே முக்கியம்; வெறும் பேச்சினாற் பயனில்லை. மரத்தின் விதையை ஈசுவரன் தரைக்குள் கிழே இருளில் வைத்துத் தயார்செய்து அது முளையானபிறகே வெளியிலே காண்பிக்கிறார். அதுபோல் ஒரு காரியத்தைப் பற்றிப் பிதற்றுவதை விட்டு விட்டு அவற்றை நமக்குள்ளேயே தொடங்கி நடத்திக் கொண்டு ஸ்திரமான பிறகு வெளியே காண்பிக்க வேண்டும். இதுவே அறிஞர் செல்லும்வழி" — என்று மிஸஸ் பெஸன்ட் அம்மையார் கூறியிருக்கிறார்.

(2) ஒவ்வொருவரும் தாம் செலவு செய்வதற்குக் கணக்குவைக்கப் பழக வேண்டும். கணக்குவைத்தால்தான் செலவை மட்டுப்படுத்தவும் கடன்படாதிருக்கவும் வழி யேற்படும். அல்லாமலும் எந்த விதமான ஒரு சச்சரவுக்கு மிடமிராது. அநேகர் சோம்பலினால் கணக்கு வைப்பதில்லை. கணக்குப்புத்

தகம் எப்போதும் பக்கத்திலேயே யிருக்கவேண்டும். அந்தந்தநாட் செலவை அந்தந்த நாளே கணக்குப் புத்தகத்தில் தவறாமல் எழுதி எது நியாயமானசெலவு எது நியாயமற்ற செலவென்பதைக் கவனித்தல் அவசியமாம். "நம்முடைய வருமானத்துக்கு நாம் கணக்கு வேறு வைக்கவேண்டுமா?" என்று சிலர் கூறுவதுண்டு. அது தவறு. பரம ஏழையும் செலவுக்குக் கணக்கு வைப்பதவசியமாகும். அதுபெரிய நன்மையைத்தரும். இதனை அநுபவத்தில் தெரிந்து கொள்ளவேண்டும்.

(1) அடைய வேண்டிய பொருளைத் தேடியடைய வேண்டும். (2) சேர்த்துவைக்கக்கூடிய பொருளைச் சேர்த்துவைக்கவேண்டும். (3) கொடுக்கவேண்டிய பொருளைக் கொடுத்தல்வேண்டும்—இது ஜான் வெஸ்லி என்னும் பெரியார் கூறிய போதனையாகும்.

(3) குலத்திலொருவன் பெருமையடைந்தால் அந்தக்குலமுழுவதும் பெருமையடையும் என்பது வேதவிதி. இதனை—யயாதி மகாராஜனுடைய சரித்திரம் நன்கு விளக்கும். பாரதத்திலுள்ளது.

(4) நல்லகுலஸ்திரீகளுக்குக் கணவனேதெய்வம். புதல்வருக்குத் தந்தையே தெய்வம். மகத்துக்களுக்கு ஆசிரியர் தெய்வம். மற்றவர்களுக் கெல்லாம் அரசனே தெய்வம்—இது அறிவு நூல்களெல்லாம் பேசும் போதனையாகும்.

(5) 'பல்லூழி காலம் பயின்றானை அர்ச்சித்தால் நல்லறிவு சற்றேநகும்" என்று பெரியார் கூறியுள்ளபடி பல ஊழி காலம் சிவனை அர்ச்சிப்பதால்

உண்டாகும் பயனால் நல்லறிவு ஒருவர்க்குச் சிறிதுண்டாகுமென்று தெரியவருகிறது. ஆகையினால் நல்லறிவானது ஒருவருக்குத் திடீரென்று தோன்றுவதன்றென விளங்குகின்றது. பெருமுயற்சிசெய்தே அதனை அடைவேண்டியதாகின்றது. நல்ல நூல்களையோதுவது, நல்லாரிடம் இணங்கி நிற்பது, ஈசுவர பூசைபுரிதல் ஆகிய இம்மூன்றுமே நல்லறிவை அடைவதற்குரிய உபகரணங்களாகப் பெரியார் கூறியிருக்கிறார்கள்.

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கம்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்-உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைக்கொடுக்குங் கல்வியினூ ஊங்
கில்லைச் சிற்றுயிர்க் குற்றதுணை''—

(7) தாய் பத்துமாதம் கர்ப்பத்திற் சுமந்துவருந்திப் பெற்று நம்மீது ஈ மொய்க்காமலும், எறும்பு கடிக்காமலும் குருகுபறவாமலும் வெயிற்படாமலும் காற்று வீசாமலும் பனி பெய்யாமலும் மார்பிலும் தோளிலும் வயிற்றிலும் வைத்துப்பாலூட்டி, மூக்குச் சிந்தி, நாசியூதி, செவியுருவி நீராட்டி, நெற்றிக்கு திலகம்பிட்டு விழிக்கு அஞ்சனந்தீட்டிப் பல பணிகளும் பூட்டி, கன்னங்கிள்ளி, உச்சிமோந்து, கண்ணோடு கண், வாயோடுவாய், முகத்தோடு முகம்வைத்துக் கொஞ்சி முத்தாடி, அருந்தனம்போல் பாவித்துத் தொட்டிலிட்டுத் தாலாட்டிச் சீராட்டி நாடோறும் வாயது கையது கொடுத்துப் போஷித்து, தன் கன்றுக்கிரங்கும் கறவை (பசுவை) போல் நெஞ்சிரங்கி நோயணுகாமல் மருந்தளித்துப் பத்திய மிருந்து கண்ணை

இமைகாப்பதுபோல் அபாயம் வராமற் காத்து நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்தவள்.

தந்தை, பசியாமல் ஊணும் உடையும் தந்து துஷ்டசகவாசம் செய்யவாவது ஓடியொளித்துத் தூர்த்தனாய்த் திரியவாவது சூதாடிப்பொய்பேசிப் புறங்கூறவாவது தன்னிச்சையாய்விடாமல் தக்கவயதிலே கல்விக்கழகத்திலே விடுத்துப் பூரணபண்டிதனாகக் கல்விபயிற்றுவித்துச் சபையார் மெச்சத்தக்க யோக்கியனாகும்படி செய்தவன். இதனாலேதான்—ஔவையார்—''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்றார்.

(8)பாலியத்தில் கல்வி பயிலவில்லை;யௌவனத்தில்
சீலம் உறும்பொருளும் தேடவில்லை - சாலவதன்
பின்னறமும் செய்யவில்லை பின்னர் நரைவருமேல்
என்னேநவன் செய்யும் இயல்பு

(9) (1) உன்னையறி — (Know thyself)
(2) முடிவை எண்ணு (Consider the end)
(3) தருணமறிந்துகொள் (Know the opportunity)
(4) உழைப்பினால் ஆகாதவொன்றுமில்லை— (Nothing is impossible to industry)

10 கள்ளிவயிற்றில் அகில்பிறக்கும் மான்வயிற்றில்
ஒள்ளரி தாரம் பிறக்கும்—பெருங்கடலுள்
பல்விலைய முத்தம்பிறக்கும் அறிவார்யார்
நல்லாள் பிறக்கும் குடி—

குகன், நந்தன், திருப்பாணாழ்வார், விபீஷணன், திருச்சடை, பிரஹ்லாதன் இவர்களையும் இவர்களைப் போல் புவியிலுதித்தவர்களையும் கவனியுங்கள். நல்லவனாகப்பிறப்பவன் நல்லகுலத்திலே தானென்பதில்லை. ஆதலினால் குலப்பெருமை பேசிக்கொண்டு கர்வம் கொள்வது பயனற்ற செய்கையாம்.

ஓர் அற்புதமான மோட்டார்

ஆஸ்திரேலியா மோட்டார் டிரைவான ஸ்ரீ நார்மன் ஸ்மித் இப்போது புதிதாக ஓர் மோட்டார் தயாரித்து வருகிறார். ஷை மோட்டார் 1-மணிக்கு 300-மைல் வேகம் செல்லுமென அவர் கூறுகிறார். இதுவரை உலகத்திலே அவ்வளவுவேகமாக ஒரு மோட்டாரும் சென்றதில்லை. ஷை மோட்டார் சாமான்களெல்லாம் மற்ற மோட்டார்களி லுள்ளது போலின்றிப் புதிதான முறையில் ஸ்ரீ ஹார்க்கனஸ் என்னும் நிபுணர் சிட்னியில் தயாரித்துவருகிறார். எல்லா சாமான்களும் புதிதாக இருக்கின்றன. அந்த மோட்டாரின் உயரம் சக்கரத்தின் உயரத்திற்குச் சமமாகத்தானிருக்கும். காலஞ்சென்ற ஸர்ஹென்ரி செக்ரேவ் உபயோகித்ததைக் காட்டிலும் இரட்டிப்புக் குதிரை வேகமுள்ள இஞ்சினை ஷை மோட்டாரில் இணைப்பார்கள். அந்த இஞ்ஜின் மாத்திரம் 8000 பொன் விலையுள்ளதென மதிப்பிடுகிறார்கள் இஞ்ஜினைத் தவிர மற்ற பாகங்களெல்லாம் கட்டி மூடிய 6000 பொன் செலவாகும். உலகத்திலேயே அதிக வேகம் செல்லுவதற்குத் தகுந்த இடமான நியூஜிலாந்தில் அந்த மோட்டாரை ஸ்ரீஸ்மித் வெள்ளோட்டம் விட்டுப்பார்க்க உத்தேசித்திருக்கிறார். அங்கேதான் ரஸ்தா நேராக 36 மைல் தூரம் செல்லுகிறது. சமீபத்திலேதான் 10-மைல் வேகத்தில் ஸ்ரீ ஸ்மித் வெற்றி பெற்றார். இதுவரை ஷை பந்தயத்தில் உலகத்திலேயே ஒருவரும் அவ்வளவு வேகம் சென்றதில்லை.

திருக்கழுக்குன்றம்

தமிழ் நாட்டில் சிவ ஸ்தலங்கள் அநேகமுண்டு. அவைகளில் மலையுடன் விளங்கும் ஸ்தலங்கள் ஒவ்வொன்றும் ஏதேனும் விசேஷமுடையதா யிருக்கின்றது. ஆதலால் இம்முறை குழந்தைகளே உங்களுக்குத் திருக்கழுக்குன்றத்தைப் பற்றிச் சொல்ல எண்ணமுண்டாயது.

திருக்கழுக்குன்றம் தமிழ் நாடுகளில் ஒன்றாகிய தொண்டை நாட்டில் விளங்குவது. செங்கற்பட்டு என்கிற ஊருக்கு அருகே உள்ளது. செங்கற்பட்டு வரையில் ரயில் செல்கிறது. அப்பால் ஒன்பது பத்துக்கல் தூரம் வரையில் வண்டிகளிலே தான் போக வேண்டும்.

திருக்கழுக்குன்ற புராணம் என்ற பெயருடன் இந்த ஸ்தலத்திற்கு ஒரு புராணமிருக்கிறது. இந்தப் புராணம் படிக்கப்படிக்கத் தெவிட்டாத கருத்துகளுடனும் கற்பனைகளுடனும் சொற்சுவையுடனும் கூடிய பாடல்களாலமையப்பெற்றது.

திருக்கழுக்குன்றம் பெரியமலையல்ல, சிறு குன்று. அதனாலேதான் அதற்குக் குன்றம் என்கிற பெயர் ஏற்பட்டது. அந்தக்குன்றின்மேல் அழகிய கட்டிடத்துடன்கூடிய சிவாலயமொன்று விளங்குகின்றது. அந்த ஆலயம் பார்ப்பவருடைய கண்களைக், கவரக்

கூடியதாயிருப்பதுமன்றி அங்கே போனவர்கள் தங்களை மறந்து அங்கேயே பொழுது போவதைக்கூட அறியாமல் தங்கியிருக்கத் தக்க மனோரம்யமடைவதுண்டு. அத்தனை சிறப்பினையுடையது அது.

குன்றினடிவாரத்தில் யாத்திரிகர் வந்து தங்குவதற்குரிய வசதிகளமைந்த சத்திரங்களும் சாவடிகளும் போஜனசாலைகளும் சிற்றுண்டி சாலைகளும் பிராமணர் வசிக்கும் அக்கிரஹாரமும் வேளாளர் வசிக்கும் அழகிய வீதிகளும் உணவுப்பொருள்கள் விற்கும் கடைவீதிகளும் காய்கறிகள் விற்கும் சாலையும் அழகிய குளங்களும் குட்டைகளும் தோப்பு துரவுகளும் சதுக்கங்களும் நிறைந்திருக்கின்றன. ஆதலால் இந்தக் கிராமம் சிறியதாயினும் இதைக்கண்டால் இதில் நமக்கொரு வீடிருந்தால் நன்றாயிருக்கும் என்று எவரும் கருதாமலிருக்கமாட்டார்கள். அவ்வளவு அழகும் செழிப்புமுடைய திந்தவூர். வருஷந்தோறும் பல பேர் அங்கேபோய்த் தேகாரோக்கியத்திற்காக வசித்து வருகிறார்கள். தெய்வ மகிமையுடன் கூடியதென்பதுமல்லாமல், இம்மலையில் நோய்களை நீக்கக்கூடிய மூலிகைகளிருப்பதாகவும் கூறுகிறார்கள். அநேகர் நோய் நீங்கப்பெற்று மறு பிறவியடைந்ததைப் போல் திரும்புகின்றனர்.

இக்குன்றம் கிழக்குத் தொடர்ச்சி மலையினைச் சார்ந்தது. இந்த ஊரைச் சூழவும் பலகுன்றுகளிருக்கின்றன. அவைகளின் மேகம்படிந்து செல்லும்போது பார்க்க வெகுரம்மியமா யிருக்கும்.

பூர்வம் வேதங்கள் ஆறு அங்கங்களுடனிருந்து சிவபெருமானைப் பூசித்தன. அப்பொழுது அவைகள் எப்போதும் சிவபெருமானுடைய திருவடியின் கீழ் நிலைத்திருக்க வேண்டுவென்று பிரார்த்தித்தன. அதுகண்டு சிவபெருமான் மகிழ்ந்து, "நீங்கள் மலைகளாக விளங்குங்கள்! நான் மலையின் சிவலிங்க சொருபமாக எழுந்தருளுவேன்" என்று வாக்களித்தார். அதன்படி குன்றுகளும் ஒரு குன்றிச்சியில் சிவலிங்கமும் தோன்றின. அதனால் அந்த லிங்கத்திற்கு வேதகீரீசர் என்று பெயர்—என்று இந்தத்தல புராணங் கூறுகிறது. இதற்கு ருத்ரகோடித்தலம் என்றும் தமிழில் கழுக்குன்றமென்றும் பெயர்கள் வழங்குகின்றன.

ஒரு சமயம் சிவபெருமான் இந்தத் தலத்தில் கோடி லிங்கமாக விளங்கிய படியால் ருத்ரகோடிஸ்தலம் என்கிற பெயரும், முனிவர் இருவர் தமக்கு ஏற்பட்ட சாபவிமோசனத்தின் பொருட்டு இரண்டு கழுகு வடிவமாக வந்து வேதகிரீசனைப் பூசிக்கின்றபடியால் கங்காசலம் என்றும் பெயர்கள் ஏற்பட்டன—என்று இத்தல புராணம் கூறுகின்றது. கங்கம் என்றால் கழுகு என்றும் அசலம் என்றால் மலை என்றும் பொருள்படும். ஆகையினாலேதான் இதற்குத் தமிழில் கழுக்குன்றம் என்று பெயர் வழங்குகிறது.

இந்தக்காலத்தில் நாளைக்கும், நாடோறும் ஒரு பண்டாரம் இம்மலையிலுள்ள சுனைக்கருகில் ஒரு பாறையில் பானையில் சர்க்கரைப்பொங்கலும் ஒரு

கிண்ணத்தில் நெய்யும் வைத்துக்கொண்டு—பகல் பன்னிரண்டு மணி சுமாருக்கு வந்து உட்கார்ந்து கொள்கிறார். இரண்டு கழுகுகள் ஆகாய வழியே பறந்துவந்து பண்டாரம் கொடுக்கும் சர்க்கரைப் பொங்கலையுண்டு நெய்யையும் அருந்திச் செல்கின்றன.

இவைகள் பன்னிரண்டு மணிக்கேனும் பன்னிரண்டு மணிக்குமேல் மூன்று மணிக்குள் எப்பொழுதேனும் வந்து உணவுண்டு செல்கின்றன. யாத்திரிகர் பார்த்து ஆச்சரியப்படுகின்றனர்.

இந்தக் கைங்கரியத்துக்காக ஸர்க்கார் படி யேற்பட்டிருக்கிறதென்றும் தெரியவருகிறது. இக்கழுகுகள் வெண்மை நிறமுடையனவாய் உச்சியிலே கோழிக்கிருப்பதுபோல் சிகையுமுடையனவா யிருக்கின்றன. மேல் மூக்கு நீண்டு வளைந்திருக்கிறது. அதற்கேற்றபடி கீழ் மூக்கு வளைந்திருக்கிறது. இவைகளைக் கழுகினத்திலும் சேர்ப்பதற்கில்லை, கருடனினத்திலும் சேர்ப்பதற்கில்லை, அப்படி யிருக்கின்றன. இவைகளைப்போன்ற பறவைகளை வேறிடங்களில் காண்பதும் அரிதாயிருக்கின்றது.

மலைமீது சிவபெருமான் கிழக்கு முகமாக மூர்த்தங் கொண்டிருக்கிறார். சுற்றுப் பிராகாரத்தில் சொக்க நாயகியம்மாளுடைய கோயிலிருக்கிறது. இம்மலையிலே ஏறிச்செல்வதற்கு ஒருவழியும், இறங்கி வருவதற்கு ஒருவழியுமாக இரண்டு வழிகளிருக்கின்றன. வழியில் படிகளெல்லாம் செங்குத்தாக இருக்கின்றன.

இந்த மலையைச்சுற்றி வலம்வருவார்கள் பக்தர்கள். அப்படி வலம் வர ஒரு மணி சாவகாசம் வேண்டியதாயிருக்கிறது. மலையிலிருந்து இறங்கும் வழியில் ஒரு பாறைக்கடியிலுள்ள மண், தலைவலி, கால் வலி, முழங்கால் வலி, மார்பின்வலி முதலிய வலிகளை நீக்குங் குணமுடையதாயிருக்கின்றது. இம்மண்ணை யாத்திரைவாசிகள் எடுத்துக்கொண்டு செல்கிறார்கள்.

இந்த ஊரில் கீழே மலையடிவாரத்தில் மதில்களும் கோபுரங்களும் பிராகாரங்களும் அமையப்பெற்ற அழகிய ஆலயமிருக்கிறது. இதில் குடிகொண்டு அடியார்க்கநுக்கிரஹம் செய்யும் ஈசுவரனுடைய பெயர் பக்தவத்ஸலேச்வரர். அம்மன் பெயர் திரிபுரசுந்தரி. அம்மன் திரிபுரசுந்தரியின் தரிசன விசேஷம் அளவிடற்கரிய பெருமையையுடையதாதலினால், பக்தர்கள் உற்சவகாலங்களிலல்லாமல் சாதாரண நாட்களிலும் சந்தியாகால பூஜை வேளையில் துதிபாடிக் கொண்டு தரிசனத்திற்கு வந்த வண்ணமிருப்பர்.

இவைகளை யன்றி இங்கே ஊருக்குள் கிழக்கே சங்கதீர்த்தம் என்னும் பெயருடைய பெரியதடாகம் அமைந்திருக்கிறது. இது நீராடிய வருடைய பாபங்களையும் நோய்களையும் போக்கிப் புனிதமாக்குகிறதென்று அநுபவமுடையவர் கூறுகின்றனர். இதில் நீராடுவதற்கென்று பல ஊர்களிலிருந்தும் ஜனங்கள் ஏராளமாக வந்து கொண்டிருக்கின்றனர்.

இத்தகைய மகிமையுடைய சிவஸ்தலங்களும் விஷ்ணு ஸ்தலங்களும் நம்முடைய தமிழ்நாட்டில் அநந்தமுண்டு. இவைகளைத் தரிசிப்பவர்க்குச் சகல பாக்கியங்களும் உண்டாகின்றன. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றையும் தரிசிப்பவர் இம்மையின்பத்தை

யும் மறுமை யின்பத்தையும் அடைவர் என்று பெரியாரும் சாஸ்திரங்களும் கூறுகின்றனர். நம்பியபேர்கள் நன்மையடைகின்றனர்.

பிள்ளைகளே! — "ஆலயந்தொழுவது சாலவும் நன்று" என்றும் — "வையந்தோறுந் தெய்வந்தொழு" என்றும், "சிவத்தைப் பேணிற்றவத்திற்கழகு" என்றும் "கோவிலில்லா ஊரிற் குடியிருக்கவேண்டாம்" என்றும் "தெய்வமிகழேல்" என்றும் — பெரியார் கூறியிருப்பதைக் கவனியுங்கள். மார்க்கண்டேயர் மூர்த்தி, தலம், தீர்த்தங்களின் தரிசனவிசேஷத்தினால் எமனைவென்று சிரஞ்சீவியானாரென்றால் அவைகளின் பெருமையை நாம் என்னென்றுபேசுவது?

அப்பர்-சம்பந்தர்-சுந்தரர் என்னும் மூவர் செய்தருளிய பதிகத் தொகை

ஆதிகலை யின்மூவரும் புகன்ற வையிலக்
கத்திரண்டாயிரந்தான்
ஆளுடைய பிள்ளையார் பனுவல் பதினாயிரம்
பதிக நாவுக்கரசர் முன்
ஓதுநாற்பத்தொன்பதாயிரந் திருநாவல்
ஊரினிலுதித்த பரிதி
உரைசெய்த முப்பதிற்றேழாயிரத் திலீண்
டுள்ள பதிகத் தொகை சொலில்
ஏதமறு தமிழ்விரகர் முந்நூற்றெழுபத்து
நான்கு வாக்கரசர் முந்நூற்
றீராறு நாவலூர் பதிகநூற்றொன்
றிவற்றினாற் பத்தெட்டுவெண்
பூதிசாதன மூவருரை பொதுப் பதிகமாம்
பூவைமேனி யரளித்த
புனைவள்ளி தெய்வயானைக்கு மணவாளனே
போரிவடிவேல் முருகனே!

இறுமாப்பு இடர்ப்படுத்தும்

சில சமயம் நாம் ஏதேனும் பேசினாலும் அல்லது ஏதேனும் ஓர் செய்கை செய்தாலும் அதைக்கண்டு பலபேர் மெச்சிப் பேசிமகிழ்தல் கூடும். அது கண்டு நாம் இறுமாப்படைவது கூடாது. அந்த இறுமாப்பு நமக்கு நல்ல பயனைத்தராது. தீமையே பயக்கும்.

ஒரு சமயம் பலமிருகங்களுக்கு இடையேபோன ஒரு குரங்கு தன் சாமர்த்தியமெல்லாங் காட்டிக் கோணங்கித் கூத்தாடியது. அதுகண்டு அம்மிருகங்களெல்லாம் சந்தோஷ மடைந்து அதனைப் புகழ்ந்ததுமன்றித் தங்களுக்கு அரசனாகவும் அதை நியமித்துக் கொண்டன.

குரங்கு கொற்றவனானதும் இறுமாப்புக்கொண்டு பலவிதமான சேஷ்டைகள் செய்தது; கண், தலை தெரியாமற் குதித்தது. அது கண்ட ஒரு நரி, "ஓ இக்குரங்கின் இறுமாப்பை அடக்கவேண்டும். எப்படிப்பட்ட வல்லவனுக்கும் ஒரு வல்லவனிருப்பான் என்பதை இது தெரிந்து கொள்ளவில்லை. இதற்கு இராஜாதிகாரம் கொடுத்தது பெரிய தவறு. 'குரங்கின் கைக்கொள்ளி' என்பதுண்டு. அதை யெண்ணிப் பார்க்கவில்லை. இருக்கட்டும்—இப்போதுதானென்ன? இதனை அடக்குகிறேன்" என்றெண்ணி ஒருநாள் அக்குரங்கை ஒரு கூண்டண்டை அழைத்துப்போய்,

"வேந்தே, இக்கூண்டில் இனிப்பான பலகாரங்களிருக்கின்றன. இதனுள் நுழைந்து வேண்டியவைகளை யெடுத்துக்கொள்ளும்" என்றது.

குரங்கு தின்பண்டத்தில் ஆசைகொண்டு அக்கூண்டினுள் நுழைந்தது. நுழைந்ததும் அக்கூண்டின் கதவு மூடிக்கொண்டது. குரங்கின் கூத்தாட்டமும் இறுமாப்பும் அடங்கின.

நரி அதைப்பார்த்து, "முன்யோசனை இல்லாத மூடா; இந்த அற்ப புத்தியைக் கொண்டா நீ அரசனையிருந்து மிருகங்களை ஆளப்பார்க்கிறாய்? புத்தி வந்ததா?" என்று கூறிக் கொக்கரித்துக் கொண்டு சென்றது.

நூதன ஸங்கீதக் கருவி

பீங்கான் கிண்ணங்களில் நீரை விட்டுச் சரியான நாதமுண்டாகும் படி செய்து கொண்டு சங்கீதம் பாடச் செய்வதுண்டு. இதற்குத் ஜலதரங்கம் என்பர். இது ஓர் புராதனமான வாத்தியம். ஆனால் தற்பொழுது புதிதாகவே ஒரு சாதனத்தைத் தெரிந்தெடுத்துள்ளார். அமெரிக்கா கண்டத்தில் சிக்காகோ என்னும் பட்டிணத்தில் ஒரு பாடசாலை மாணாக்கர்கள் ஓர் புதிய் சங்கீத சாதனம் உண்டாக்கி-உள்ளார். பூந்தொட்டிகளைத் தலை கீழாகத் தொங்க விடுகின்றனர். அந்தத் தொட்டிகள் அளவிலும் தடிப்பிலும் வேண்டியவளவு வித்தியாசப்படும். இவைகளை ஒரு கோலினால் தட்டுவார்கள். அப்படித் தட்டுவதனால் ஓர் இனிமையான ஓசை ஏற்படும். இது ஓர் விசித்திரமான, சுகமான யுக்தியாகும்.

ஒரு பழங் கதை

'ஒரு தகப்பனானவன் ஆறுபிள்ளைகளைக்காப்பது அரிது' என்று ஜெர்மானியர் சொல்லிக் கொள்வது வழக்கம். அதற்கு எடுத்துக்காட்ட அவர்கள் பின்வரும் கதையை வழங்கி வருகின்றனர் :—

"காஸ்பர்" என்று ஓர் கிழவனிருந்தான். அவன் தன்னுடைய கன்று காலிகளையும், நிலநீர்களையும், வீடு வாசல்களையும் தோட்டந் துரவுகளையும் தன்னுடைய மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து, சாகுந்தனையும் தன்னை யாதரித்து வரும்படி ஏற்பாடு செய்தான்.

சிலகாலம் மூத்தபிள்ளையினிடத்தில் இருந்தான். ஒரு நாள் அந்தப் பெரிய பிள்ளை "நாயனே, தாங்கள் சாய்வு நாற்காலி போட்டுச் சதா உட்கார்ந்திருக்குமிடம் அந்தக் குழந்தையின் தொட்டிலைக் கட்டி வைப்பதற்குத் தகுதியான இடமா யிருக்கிறது. எனக்கு நேர் இளையவன் வீட்டில் இதைக்காட்டிலும் பெரிய அறை இருப்பதனால் அங்கே போயிருப்பது உங்களுக்குச் சௌகரியமா யிருக்கும்" என்று சொன்னான்.

அந்தக் கிழவனும் அவன் மனம் நோகாம லிருக்கும்படி சரேலென்று இரண்டாவது குமாரனிடம் போய்ச் சேர்ந்து அங்கே சில நாள் வசித்துக்கொண்டிருந்தான். ஒருநாள் அந்தப் புத்திரன் "நீர் இந்த அறையிலே தானே புகுந்து கொண்டிருப்பது எனக்

குத் தலைநோவாக இருக்கிறது. ரொட்டிக்கிடங்கு வைத்திருக்கும் என் தம்பி வீடு உமக்கு அநுகூலமா யிருக்குமல்லவா"? என்று சொன்னான். கிழவன் "சரி, சரி" என்று தலையசைத்துக் கொண்டு மூன்றாவது புதல்வனிடம் போனான். அங்கு போய்ச் சேர்ந்த ஏழெட்டு நாளில் அந்தப் புண்ணியவான், "அண்ணா! இங்கே எந்நேரமும் வருவாரும் போவாரும் ஏக சந்தடியாயிருக்கிறது. உமக்கு, பாவம் பகலில் ஒரு நாழிகை கூட நித்திரை பிடியாது. ஆகையால் நம்முடைய பட்டணத்து மதில் சுவரின்மேலே என்னுடைய சகோதரி வாசஞ்செய்கிற வீட்டிற் போய்ச் சேர்ந்து போவீரானால் உமக்கு மெத்த சவுகரியமாயிருக்கு மென்று தோன்றுகிறது. அது நிசப்தமான இடம்" என்றான்.

கிழவன் "ஐயோ! இப்படி இடம் இடமாக மாறிக்கொண்டு உழலும்படி நேரிட்டதே" என்று தன்னுள்ளே அருவருத்துக் கொண்டு, "ஆமாம், நல்லது, நான் போகிறேன்" என்று சொல்லி விட்டு, "பெண்களுக்குச் சிறிது இளகின நெஞ்சு உண்டெனச் சொல்லுவார்கள். ஒருவேளை, அங்கு சற்று சௌக்கியமாக இருந்தாலும் இருக்கலாம்" என்று எண்ணிக்கொண்டு அங்கு போய்ச் சேர்ந்தான்.

அங்கு போய்ச் சேர்ந்து நின்று நிதானிப்பதற்குள் அந்தப் புண்ணியவதி, "நாயனா! நீங்கள் இந்தப் படிகளின்மேல் ஏறவும் இறங்கவும் வெகு சங்கடப்படுவீர்கள். எங்கே விழுந்து விடுவீர்களோ என்று எனக்கு வயிறு பக்கு பக்கு எனப் பதைக்கிறது. சம

நிலத்தில் குடியிருக்கிற என் தங்கை வீடானால் உங்களுக்கு உத்தமமா யிருக்குமே" என்றாள்.

அந்தக் கிழவனுக்கு இதைக்கேட்டதும் நெஞ்சம் புண்ணாய்விட்டது. இருந்தாலும் தன் மனத்தை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டு ஐந்தாவது பிறப்பாகிய எலிஜபத் என்னும் புதல்வியிடம் போய்ச் சோந்தான்.

அந்த உத்தமி "இந்த வீட்டிற்குப் பக்கத்திலே ஏரி குளங்களிருப்பதனால் வயது சென்றவர்களுக்கு இது வசமான இடமல்லவே. வெட்டியாரவேலை செய்யும் ஒருவனுக்கு வாழக்கைப் பட்டிருக்கிற கடைசி குமாரத்தி வீடு காற்றோட்டமாய்ச் சுகமாய் இருக்கிறதே" என்று சொல்லி யனுப்பி விட்டாள்.

கிழவரும், "நல்லது, நான் போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு மெல்ல நகர்ந்துபோய் அருமையான ஆறாவது புத்திரியிடத்தில் சேர்ந்தார்.

அங்கு போய்ச் சேர்ந்து எண்ணி இரண்டு நாளானதும், அந்த வீட்டுப் பேரப் பிள்ளை எதிரிலே வந்து, "தாதா! அம்மா அத்தையினிடத்தில் நேற்றுச் சொன்னார்கள் தெரியுமா? அதோ அங்கே நாயனா தோண்டி வைக்கிற பிரேதக் குழிகளில் ஒன்றிலே போய்ச் சேர்ந்தாயானால் உனக்குச் சுகமாயிருக்குமாம். என்ன தாதா அது உனக்கு இஷ்டந்தானா?" என்றான்.

அச்சிறுவன் அப்படிச் சொவ்வதைக் கேட்டு நெஞ்சம் புண்ணாகி, மனம் வேக்காடெடுத்து, எழுந்து

சாய்வு நாற்காலியின் மேல் போய்ப் படுத்து கண்ணை மூடிக் கொண்டான் கிழவன்.

அப்படியே கடைசியாக அந்தப் பிரேதக்குழியே அவனுக்கு நிம்மதியான இடமாயிற்று. அவனுடைய சரீரம் அங்கே கிடக்க, அவனுடைய ஆத்துமா பரலோகப் பிராப்தி யடைந்தது.

"ஒரு பிள்ளை பெற்றவருக்கு உறியிலே சோறு, நாலு பிள்ளை பெற்றவருக்கு நடுத்தெருவிலே சோறு" என்று தமிழர் சொல்வதும் இதைத்தானே காட்டுகிறது.

(லக்ஷ்மி)

Sour milk
மோர்

மோர் இன்னதென்பது எல்லோருக்கும் தெரியும். இதன் நற்குணங்களை நன்கு சகலரு மறிந்துள்ளார். பாலிலிருக்கும் குணங்கள் இதுகாறு மறிந்தோ ரிலர். அவைகள் இன்னவை என்று சொல்ல முயன்று வருகின்றனர். ஆனால் சிலவற்றை மாத்திர மறிந்துள்ளார். பச்சைப் பாலைக் கடைந்து வெண்ணெ யெடுக்கின்றார்கள். அதை ஆங்கிலத்தில் Butter milk 'பட்டர் மில்க்' என்று சொல்வதுண்டு. பாலைத் தயிராகமாற்றிப் பின்னர் வெண்ணெயைக் கடைந்து மீதி யிருக்கும் பதார்த்தத்தை மோர் என்பர். இதை Sour milk 'ஸ்வர் மில்க்' என்று சொல்வர். இதைப் பருகுவதினால் மிக நன்மையுண்டு சரீரத்திற்கு. இது கிருமிகளை நசிக்கச் செய்யும்; அஜீர்ணத்தைக் கண்டிக்கும். இதனால் இன்னும் அநேக குணங்களேற்படும். இது தேக புஷ்டியை யளிக்கும். தினமுமிரவில் முகத்தில் கொஞ்சம் மோரைத் தேய்த்துக் கொண்டு தூங்கினால் முகத்தில் அழகுமிகுமாம்.

செடி விநோதம்

தொட்டால் சுருங்கி

'புற் பூண்டுகளுக்கும் நம் போன்று இன்ப துன்ப உணர்ச்சி உண்டு' என்று ஸ்ரீ ஜகதீச சந்திர வசு (திரும்பக்) கண்டு பிடித்த உண்மை 'இந்திய தத்துவ சாஸ்திரத்திற்கே' புத்துயி ரளித்திருக்கின்றது. தாவர வர்க்கங்களுக்கு 'உள்ளறிவு உண்டு' என்று விஷ்ணு புராணங் கூறிப் பல நூற்றாண்டுகளாய் விட்டன என்றாலும், ஸ்ரீ வசுவைப்போன்று நிரூபிக்க எந்த வியாசரும் வெளிவரவில்லை! வசுவின் ஆராய்ச்சியில் 'தொட்டால் சுருங்கி' என்ற செடி முதன்மைபெற்றது. சாதாரணமான ஜடவாயு வீசும்பொழுது இந்தச் செடி ஒய்யாரமாக நிற்கின்றது; ஆனால் மனிதர்களின் (பிற பிராணிகளின்) பிராணவாயு பட்டவுடன் அந்தச் செடியானது "பள்ளிக்குச் செல்ல மனமில்லாத சிறுவனது முகம்போல்" தன்னுடைய கை முகங்களாகிய அவயவங்களைச் சுருக்கிக்கொண்டு தனது முகவாட்டத்தை வெளியிடுகின்றது. நாம் அதன்மீது மூச்சு விடவும் அதற்குச் சம்மத மில்லை! மலையாள பாஷையில் இதன் பேர் "தொட்டால் வாடி!" இது சரியானதே. தொட்டால் ஒட்டி என்றும் ஒரு செடி உண்டு. இந்தச் செடியைப்போன்று துஷ்டர்களின் வாடை பட்டால் கூட உடலும் உள்ளமும் பதைக்கும் நல்லோர் பலருளர்.

வாடா மல்லிகை.

நல்லோரின் திருவுளம் தீமையைக்கண்டு நடுங்குவதேன்? அது பலவீனத்தால் நடுங்குவதன்று; ஆனால் தாம் சிறிதும் தீங்கில் சம்பந்தங்கொள்ளக் கூடாதென்பதே அவர்களின் கருத்து. என்றும் வாடாது அன்றலர்ந்த மல்லிகைபோல் விளங்கும் நல்லோருள்ளம் இன்ப துன்பங்களால் சிறிதும் வாடாத 'வாடாமல்லி' யன்றோ?

தொழு கண்ணி.

செடிவர்க்கங்களிற் சேர்ந்த இந்த மூலிகை தனது இலைகளால் எப்பொழுதும் தொழுத வண்ணமே கை குவித்தலும் விரித்தலும் காணற்கரிய காட்சியாம்! கடவுளின் பெருமையைக் கருதி அது வியந்ததுபோலும்! அது கரங்குவித்தலைக் காணும் பொழுது எத்தகைய கன்னெஞ்சனும் கடவுளை நினைந்து உள்ளங் குழைந்து போற்றுவான் என்பது மிகை யாகாது.

சேந்தட்டி

நாம் அறிந்தோ அறியாமலோ ஒரு கூட்டத்திற் செல்லும்பொழுது நமது அவயவம் பிறர்மீது தீண்டிச் செல்லல் இயல்பு. அதனைப் பொறாத சிலர் நமது அவயவத்தைத் துன்புறுத்துதலும் இயல்பாவது போல் நம்முடைய உடலம் தீண்டவுடன் தினவுண்டாக்கும் செடியும் இருக்கின்றது. அதற்குச் செந்தட்டி யென்று பெயர். இவற்றை உற்று நோக்கும் பொழுது தாவர வர்க்கங்களிலும் நல்லன தீயன நிறைந்துள்ளதை அறியலாம்.

(லோகோபகாரி)

திருடர்களும் கழுதையும்

இரண்டு திருடர்கள் கூடி ஒரு கழுதையைத் திருடிச் சென்றனர். கொஞ்சதூரம் சென்றதும் அவர்களுக்கு இந்தக் கழுதையை விற்பதா வளர்ப்பதா வென்ற எண்ணமுண்டாயிற்று. இப்படி யொருவருக்கொருவர் சண்டை யிட்டுக் கொண்டிருக்கும்பொழுது மூன்றாவதாக ஒரு திருடன்வந்தான். அவன் வந்ததும் இவர்கள் சச்சரவைக் கேட்டுக் கழுதையண்ணனைத் தான் கொண்டு போகப்பிடித்தான். கழுதை "சரிதான், இப்பொழுது இரண்டு பேருக்குள்ளே இப்படி சண்டையுண்டாயிருக்கும்போது மூன்றாவதாக நீயும் கூடினால் நான் யாரிடம் தங்குவதென்பதைத் தீர்த்து விட்டு அழைத்துப்போ" என்றது. இதனைக் கேட்ட மூன்றாவது திருடன் இதற்குப் பதிற்சொல்ல முடியாது விழித்துக் கொண்டிருக்கும்போது, வழியில் வந்த நான்காவது திருடனொருவன் இவர்களையெல்லாம் வரும்போழுதே பறிந்து இவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கும்படி செய்துவிட்டுக் கழுதையைத்தட்டி ஓட்டிக் கொண்டு போய்விட்டான்.

ஆகையால் ஒரே நிதானமில்லாமல் பலர்கூடிப் பலயோஜனை சொல்லுவார்களாயின் ஒன்றும் நிறைவேறுவதில்லை.

எமனும் திருப்தியற்றவனும்

ஒருதிருப்தியற்றமனிதன் எப்பொழுதும் தான் கஷ்டப்படுவதாயும், எப்பொழுதுதான் இவ்வுலகவாழ்க்கையைத் துறப்பதோவென்றும் கடவுளைத் தியானித்த வண்ணமாகவே இருந்தான். இவன் ஓயாது ஒழியாது உயிர்வாங்கும் கடவுளான எமனை வேண்டுவதைப் பார்த்து, மனமிரங்கி இவன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்வோமென்று நினைத்து, எமன் வந்து திருப்தியற்றவன் வீட்டுவாசல் கதவைத் தட்டவும் திருப்தியற்றவன் கண்டு திடுக்கிட்டு "ஐயோ! இந்த கோரரூபியைப் போகச்செய்யுங்கள்! இவன் எதற்காக வந்தான்?" என்று பிரலாபித்தான்.

எமன் "அப்பா தினப்படி இடைவிடாது நீ வேண்டினையே அதற்கு மனமிரங்கித் தான் இப்பொழுது வந்தே" னென்றான். "ஐயோ நான் என்ன செய்வேன்! தங்களைப்பார்த்தால் பயமாயிருக்கிறது. ஆகையால் நாங்கள் இப்பொழுதே இந்த வீட்டைவிட்டு அகல வேண்டும்" என்று அவன் வேண்டிக்கொள்ள எமனும், "மனிதர் கஷ்டப்படுவதாக நினைத்து அந்தச் சமயம் மனதில் தோற்றுவதையெல்லாம் சொல்லுவது சகஜம் போலும். திருப்தியாயிருப்பது மனிதசுபாவத்துக்கு உள்ளதாயிருக்க அப்படியிருப்பதில்லையானால் கஷ்டப்படுவதாகத்தோன்றும்" எனச் சொல்லிச் சென்றார்.

21183

ஜப்பானில் பாய் பின்னுதல்

மதுரை "செந்தமிழ்ப்" பத்திரிகையில் பாய் பின்னும் தொழிலைப்பற்றி ஒரு வியாசம் காணப்படுகிறது. ஜப்பான், கைத்தொழிலின் பலத்தால் முன்னுக்கு வந்த தேசம். ஐரோப்பா கண்டத்திற்குப் பிரிட்டன் அதாவது இங்கிலாந்து எப்படியோ, அப்படியே ஆசியா கண்டத்திற்கு ஜப்பான் தேசத்தில் கைத்தொழில் விஷயமாயுள்ள கொள்கைகளை நாம் அனுஷ்டானத்திற்குக்கொண்டுவந்து, ஜப்பான் மாதிரிகளையும் கைக்கொண்டால் நமது தேசத்துக் கைத்தொழில் வெகு சீக்கிரத்தில் அபிவிருத்தி யடையும். ஜப்பான் கைத்தொழில்களில் முக்கியமானதிலொன்று பாய் பின்னுந்தொழில். ஒவ்வொரு ஜப்பானிய வீட்டிலும் புருஷர்கள் ஸ்திரீகள், குழந்தைகள் ஆகிய எல்லாரும், வேறு வேலையுள்ளவர்களாயிருந்தால், ஒழிவுகாலங்களிலும் பலர் ஓயாமல் எப்பொழுதும் இத்தொழிலையே செய்துவருகிறார்கள். 1907-ம் வருஷத்தில் ஜப்பானிலிருந்து அயல் நாடுகளுக்கு 8,760,000 ரூபாய் விலை மதிப்புள்ள கோரைப்பாய்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதனாலேயே ஜப்பானில் இத்தக்கைத்தொழிலின் அபிவிருத்தி வெளியாகிறது.

இந்தப் பாய்கள் ஒருவித கோரைப் புற்களால் பின்னப்படுகின்றன. இந்தக் கோரைப் புற்கள் ஜப்பான் தேசத்து நெல் வயல்களில் ஓரங்களில்

விசேஷமாய்ப் பயிராகின்றன. இவைகளை ஜப்பானியர்கள் தகுந்த உரம் போட்டு, சாகுபடி செய்கிறார்கள். கோரைப்புற்கள் நன்றாய் விளைந்ததும் அவைகளை வெட்டி வெயிலில் காயப்போட்டு, அவைகளின் நீளத்தை அநுசரித்துத் தரவாரியாய்ப் பிரித்து, அவசியமானால் சாயத்திலேயும் தோய்த்தெடுத்து, தறிகளின் உதவியால் பலவித அலங்காரமான பாய்களைப் பின்னுகிறார்கள்.

உபயோகமற்ற பாய்களை ஏற்றுமதி செய்து ஜப்பான் தொழிற்பெருமையைக்கெடுத்து விடாமற் பார்த்துக் கொள்ள 1905-ம் வருஷத்தில் கவர்ன்மெண்டார் அவநுடைய முயற்சியால் ஏற்றுமதி செய்யப்படும் பாய்கள் அநேகமாய நல்லவைகளாயும் உயர்ந்தவைகளாயும் இருக்கின்றன.

இந்தியாவிலும் பாய் பின்னுந் தொழில் இல்லாமல் போகவில்லை சென்னை ராஜதானியில் தென்னாற்காடு ஜில்லாவில் முக்கியமாய்ப் பறங்கிப்பேட்டை. கூடலூர் முதலிய இடங்களிலும், தஞ்சாவூர் ஜில்லா சீர்காழி தாலுகாவிலுள்ள கொள்ளிடக் கரைக்கு இப்புறத்திலுள்ள ஆணிக்காரன் சத்திரம், மதுரை ஜில்லாவில் துருக்கர் வாசஸ்தானமாகிய தைக்கால் முதலிய இடங்களிலும், மலையாளத்தில் பாலக்காடு, கள்ளிக்கோட்டை திருநெல்வேலிக் கடுத்த பத்தமடைபோன்ற சில கிராமங்களிலும், இந்தப்பாய் வேலை வெகு நேர்த்தியாகவும்,. விதம் விதமாகவும் செய்யப்பட்டுப்பாயொன்று ரூபா 50, 60, 100, 150,

வரையில் விலையில் மதிப்புப் பெற்றிருக்கின்றன. இந்தப்பாய்களில் பட்டுகள் சேர்த்து வெகு நேர்த்தியாய்ப்பின்னும் மாதிரி மிகவும் சிலாகிக்கத் தகுந்தது. தினுசுக்குத் தகுந்தாற்போல் விலை மதிப்பேறப்பெற்ற ஒரு மனிதன் படுக்கக்கூடிய அகலமும் நீளமுமுள்ள ஒரு பாயை உள்ளங் கையில் சுருட்டி மடக்கி வைத்துக்கொள்ளும் படியான அந்தஸ்தில் செய்யப் படுவதென்றால் நம் நாட்டுக் கைத்தொழிலைப் பற்றி கேட்பானேன். இந்த அருமையான பாய்களைத் தவிர கிராமங்கள் தோறுமுள்ள நிலங்களின் ஓரங்களில் யாதொரு எருவு மில்லாமல் தானாகவே, ஜலத்தில் வளர்ந்து கிடைக்குங் கோரைப் புற்களைக் கொண்டு நம் நாட்டு ஸ்திரீ புருஷர்களும் நேர்த்தியான கோரைப் பாய்களைப் பின்னி வீட்டுபயோகத்திற்குப் பெரிதும் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

ஆனால் இப்பொழுது சிலவருஷங்களாக இந்தத் தொழிலைக் கவனிப்பாரே கிடையாது. ஜப்பான் கவர்ன்மெண்டாரைப் போலவே நமது கவர்ன்மெண்டாரும் இன்னும்பல முதலாளிகளும் தொழிலாளிகளைச்சேர்த்து இந்தத் தொழிலில் கவனம் செலுத்தி அபிவிர்த்திக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்யவேண்டியது அவசிய மென்று நிருபர் எழுதியிருக்கிறார். படுக்கைக்குக் கீழே ஜமக்காளங்களையும் கம்பளிகளையுமே உபயோகப்படுத்தும் வழக்கமும் அதிகப்பட்டு வருவதால் நிருபர் பேச்சு ஏறும் என்பது சந்தேகமாகத் தோன்றுகிறது.

தருமம் செய்யாமல் பணம் சேர்க்காதே

நல்லூரிலே நாதமுனியென்னும் பெயர் கொண்ட பணக்காரர் ஒருவர் இருந்தார். அவருக்குப் பணம் ஏராளமாயிருந்தது. ஆனால் பிள்ளையில்லை. ஆனால் அவருக்குப் பணத்தைமேன்மேலும் தேடுவதில் ஆசை அதிகமாய் இருந்தது. அதனால் அவர் மனம்போனபடி நடந்து பணத்தைத் தேடிக்குவித்தார்.

எவரேனும் யாசகர்வந்து கேட்டால்- "உனக்கென்னகேடு, உழைப்பதற்கென்ன ? சோம்பேறிபோ" என்று அவர் வெடுவெடுப்பாய்ப் பேசுவார். உறவினர் வந்தால் வந்ததும் "எங்கேவந்தாய்? எப்போது ஊருக்குப் போவாய்?" என்று கேட்பார்; ஒரு வேளை சோற்றுக்குமேல் போடமாட்டார். ஊரில் தண்ணீர்ப்பந்தல் தர்மம் — அன்னதான தர்மம் — ஆலய கைங்கர்ய தர்மம் — வித்யாதானம் — என்று எவரேனும் கேட்டால் "உங்களுக்கு வேலையில்லை போலிருக்கிறது. போங்கள் — தர்மம், தானம், புண்ணியம், பாவம் — இவையெல்லாம் யார் கண்டார்கள் —" என்பார்.

இப்படியிருக்கவே, அவருக்கு ஊராரெல்லோரும் விரோதியானார்கள்; அவரைக் கெடுக்கச் சமயம் பார்த்திருந்தார்கள்; பின் அவரை ஒரு கொலை வழக்கில் சம்மந்தப்படுத்தினார்கள்.

நாதமுனி அதிலிருந்து தப்ப வழி தேடினார். பணச்செலவு செய்யாமல் ஒரு காரியமும் நடைபெறவில்லை. போலிசாருக்கும் வக்கீலுக்கும் சாக்ஷிகளுக்கும் வண்டிவாடகைக்கும் சோற்றுக் கடைக்கும், வஞ்சகர்களுக்கும் பணத்தை அவர்கள் கேட்குமுன் கொடுக்க வேண்டியதாயிற்று. "கொடாத பாவி கெட்டான்" என்று எல்லோரும் அவரைத் தூற்றினார்கள். இதனாலேதான் (4) "ஈயார் தேட்டைத் தீயார் கொள்வார்" என்றும் (5)—"ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்" என்றும் ஔவையார் கூறினர்.

(4) பொருள் — ஈயார் — கொடாத லோபிகளுடைய, தேட்டை — செல்வத்தை, தீயார் — கள்வர், முதலான தீயோர், கொள்வர் — துன்பப்படும்படி வருத்தி அடைவர்.

(5) ஊருடன் — தான் இருக்கும் ஊராருடன், பகைக்கின் — ஒருவர் விரோதித்துக் கொண்டால், வேருடன் — அவன் வம்சத்துடன், கெடும் — அழிந்து விடுவான்.

---

30 பேர் பரிதாப மரணம்

ஈரோடு லண்டன் மிஷன் மாணவர் விடுதியில் திடீரென்று 30-பேர் இறந்து விட்டதாயும் 12-பேர் வைத்திய சாலையில் இருப்பதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது. இதன் காரணம் விளங்கவில்லை. சிலர் காலரா கண்டிருக்கு மென்கிறார்கள். வேறு சிலர் குழம்பு முதலிய ஆகார பதார்த்தத்தில் பாம்பு முதலிய விஷ ஜந்துக்களின் விஷம் கலந்து விட்டிருக்க வேண்டுமென்கிறார்கள். இச்சம்பவம் நடந்து ஒருவாரமான பின்பே வெளியானது. இதன்மர்மும் விளங்க வில்லை.

செய்கைக்குத் தக்கபயன்

ஒரு வாலிபன் ஒரு வைத்தியனிடம் போய் "எனக்கு வயிறு வலிக்கிறது, மருந்து வேண்டும்" என்று கேட்டான், வைத்தியர் "நேற்று இரவு நீ என்ன புசித்தாய்?" என்று கேட்டான். வாலிபன், "ஒரு விருந்தில், வடை, போளி, அப்பளம், பாயசம் எல்லாம் கிடைத்தன, சாப்பிட்டேன்" என்றான்.

வைத்தியர் "அளவாய்ச்சாப்பிட்டிருக்க வேண்டும். விலாப்புடைக்கத்தின்றிருப்பாய்! அதுகூடாது, அப்போது ஆசையாய்த் தின்றபயனை இப்போது நோயாய் அனுபவிக்கிறாய்! ஒவ்வொருவரும் அவரவர் செய்கைக்குத் தக்கபடி பயனை அனுபவிப்பர். இதனாலேதான் ஔவையார் 'பண்ணியபயிரிற் புண்ணியம் தெரியும்' என்று கூறினார்" என்று தெரிவித்து மருந்து கொடுத்தனுப்பினார்.

(ஸோமாஸ்கந்தன்)

மூக்கைக் கடித்த மூடன்

ஐக்கிய மாகாணத்தில் ஓர் ஊரில் மகாதேவி என்ற மாது தனது கணவன் தொல்லை பொறுக்க முடியாமல் பெற்றோர் வீட்டிற்கு ரகசியமாகப் போனாள். கணவன் மனைவியைத் தேடிச் சென்று வழியிலே கண்டு வீட்டுக்கு வரும்படி அழைத்தான். மனைவி மறுக்கவே கணவன் கோபம் கொண்டு அவள் மூக்கைக் கடித்து விட்டான். இது பற்றி வழக்கு ஏற்பட்டதில் மாஜிஸ்ட்ரேட் 25 ரூபாய் அபராதம் விதித்தார். ஐக்கோர்ட்டுக்கு இந்த வழக்குப் போனதில் அபராதத்தை ரத்து செய்து விட்டு மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

உத்தமமான தொழில்

1. மனிதனின் தினசரி வாழ்க்கைக்கு அத்யந்த அவசியமானவை அன்னமும் ஆடையுமேயாம். அன்னம் உயிரைக்காப்பது. ஆடை மானத்தைக் காப்பது.

2. மணமகன் மணவரையில் மணமகள் நெய்த ஆடையையே உடுத்தவேண்டுமென்று ரிக், யஜுர், அதர்வண வேதங்கள் கூறுகின்றன.

3. கடவுள் வசிக்கும் தேவாலயங்களில் அந்ய தேச ஆடைகளும் பட்டாடைகளும் உபயோகப்படுத்துவது துயரக்காட்சி யென்றும் பூணூல் தரிப்பவர்கள் சாஸ்திரப்படி தாங்கள் தங்கள் கையினால் நூற்ற பூணூலைத்தரிக்காமல் மில் அல்லது பரதேச நூலைக் கொண்டு பூணூல் செய்து கொள்வது விசனகரமானதென்றும் மகாத்மா காந்தி கூறுகிறார்.

4. பெண்கள் மெல்லிய மஸ்லின் நூல்களான சேலையை உபயோகிக்கலாகாதென்று புத்த பகவான் கட்டளை யிட்டிருக்கிறார். நகுலபீடன் என்பவர் சாகுந்தருணத்தில் தம்மனைவியை நோக்கித் தாம் இறந்தபின் வறுமையினால் கஷ்டப்படுவாளே என்று வருந்தியபோது, அவர் மனைவி "எனக்கு நூல் நூற்கத்தெரியும் நான் அதன் மூலமாகப் பிழைக்க வழி தேடிக்கொள்வேன். ஆகையினால் தாம் வருந்த

வேண்டாம்" என்றுளாம். இப்படி புத்தசரிதையில் வரலாறு வருகிறது.

5. பொன்னினாலாவது முத்துக்களினாலாவது விலைபெறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரித்துக் கொள்ளாமல் தகுதியான வஸ்திரத்தினாலும் நாணத்தினாலும் தெளிந்த புத்தியினாலும் நற்கிரியைகளினாலும தங்களை அலங்கரித்துக்கொள்ள வேண்டும் என்று கிருஸ்துமதம் உபதேசிக்கிறது.

6. பெண்களின் உத்தமமான தொழில் நூல் நூற்றலே என்று மகமதிய நூல் கூறுகின்றது.

7. பெண்கள் வெளியே செல்லாமலும் பிறரை எதிர்பாராமலும் கற்புடன் ஜீவனம் செய்வதற்கு உதவுவதால் நூற்றல் பெண்களுக்கு உத்தமமான தொழிலாயிற்று—என்று மகமதிய கிரந்த வியாக்யானகர்த்தா விவரிக்கிறார்.

8. ஸர்க் ஸீனு என்னும் மேனாட்டில் விவாக தினத்தன்று மணமகன் மணமகள் நெய்த உடையையே உடுத்துவது வழக்கமென்று லீபர் என்கிற துரை எழுதுகிறார்.

9. தமிழில் வேதம் வகுத்த திருவள்ளுவர்— செய்யுந் தொழிலிலெல்லாம் நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை" என்று கூறுகின்றனர்.

10. இந்தியர் பண்டைக்காலத்தில் நெய்த துணி அழகாயும் மெல்லிதாயும் இருந்தது. அது பல நாடுகளுக்கு அனுப்பப்பட்டபடியால் இந்தியர் வியாபாரத்தில் பெரும் பொருள்தேடி வாழ்ந்தனர்.

3000 வருஷங்களுக்கு முன் எகிப் தேசத்தில் அரசாண்ட அரசர்களின் பிரேதங்கள் மீது போர்த்

தப்பட்ட துணிகள் இந்தியாவில் நெய்யப்பட்ட மெல்லிய துணிகள்—என்று மேல்நாட்டார் கூறுகின்றனர்.

11. பலஸ்தீனாவில் அரசுபுரிந்த சாலமோனுக்கு இந்தியாவிலிருந்து ஸிந்து என்னும் துணி போயிற்றாம். (ஹிந்து-மஸ்லின்)

உணவு

மக்களில் புத்திமான்களாயுள்ளவர்கள் — தங்கள் தேக சௌக்கியத்திற்கேற்ற உணவுப் பொருள்களைத் தேடியடைந்து தாங்களே பக்குவப் படுத்திக்கொண்டு — உண்கிறார்கள். மதியீனர்கள் அப்படி செய்வதில்லை. மனம் விரும்பிய பொருள்களைத் தேக சௌக்கியத்திற்கேற்றவைகளா, அல்லவா என்பதை விசாரியாமல் எங்கேனும் எந்த இடத்திலேனும் எந்த ஆசார ஹீனனேனும் பக்குவப்படுத்தி வைத்திருந்தாலும் விலைக்குக் கொண்டு உண்டு திருப்தி யடைகிறார்கள்.

எந்தத் தேசத்தில் எந்தப் பொருள்கள் விளைகின்றனவோ அந்தப் பொருள்களே அவர்கள் உணவிற்கேற்றவைகளாகுமல்லது, அன்னியதேசத்துப் பொருள்கள் ஏற்றவைகளாவதில்லை- இது அநுபவிகளுக்குத் தெரியும். உணவுப் பொருள்களைப் பக்குவம் செய்வதிலும் அந்த அந்த தேசத்தவர்களே அந்தந்த தேசத்துப் பொருள்களைப் பக்குவஞ் செய்யத் தகுதியுடைவராவரே யல்லது ஏனையர் தகுதி யுடையவராகார்.

முத்துத்தாண்டவர் கீர்த்தனம்.

இராகம்—சங்கராபரணம் தாளம்—ஆதி.

பல்லவி

ஈசனே கோடி சூரியப்பிரகாசனே கனகசபை—

அநுபல்லவி

வாசனே ஆநந்த நடராஜனே (ஈசனே)

சரணங்கள்

1 அறியேன் நெஞ்சில் நேசம் பிரியேன்—
வருங் கருமம் குறியேன் அறிவில்லாத
சிறியேனை நீ யாளாய் (ஈசனே)
2 நினையேனுனை வேடமும் புனையேன்
சிவகங்கையி னனையேன்—கொடிய தீ
வினையேனுய்யவே யாளாய் (ஈசனே)
3 துதியேன் வணங்காவஞ்ச—மதியேனென்
றுலுஞ் சபாபதியே, நம்பினேன் சிவ
கதியே தந்தென்னை யாளாய் (ஈசனே)

கிழவன் குமரனாதல்

குரங்கு நரம்புக் கோளங்களின் சத்தை எடுத்து மனிதர் உடலில் வைத்துச் சிகிச்சை செய்வதன் மூலம் 60-க்கு மேற்பட்ட கிழவர்களை 25 வயது போன்ற வாலிபர்களாக்கக் கூடும் என்று ஜெர்மெனியைச் சேர்ந்த டாக்டர் சொர்ஜ் வார்னாப் கூறி வருவது பெரும்பாலும் அனைவரு மறிந்த விஷய மாகும். மக்களுட் பலர் குரங்கு நரம்புச் சத்தை வைத்துக்கொண்டு அதன் மூலம் ஏற்படும் சந்ததி குரங்கை யொத்தே இருக்குமென எண்ணினர். 7 ஆண்டுகளுக்கு முன் மேற்படி டாக்டர் 62 வயதான ஒருவருக்கு மேற்படி சிகிச்சை செய்தார். அவருக்கு இப்போது இரு பெண் குழந்தைகள் பிறந் திருக்கின்றன. அவ்விரு குழந்தைகளும் அழகும் வலிமையும் பொருந்தினவர்களாய் இருப்பதுடன் கூர்ந்த மதியினராயும் இருக்கின்றனர்.

பெண்களுக்கு இன்சொல்

மதியிது மதியிது பெண்ணே— புண்ணிய
வதியல்லவோ நல்ல மகராஜி கண்ணே (மதி)
1 கற்புநிலையே சிங்காரம்—அது
தப்பினோழகு சவ அலங்காரம் (மதி)
2 சீவன்போற் கற்பைக் காப்பாற்று யார்க்கும்
சாவு தலைமேலே சாமியைப்போற்று (மதி)
3 அரைக்காசுக்கழிந்திட்ட கற்பு—நூறு
மரக்காற் பொன் கொடுத்தாலும் வருமோ—நீ
செப்பு (மதி)
4 அந்நிய னழகனானாலும்—கற்பின்
மின்னிடையார்க் கவன் விஷ நாகம்போலும் (மதி)
5 கணவன் குரூபியானாலும்—கொண்ட
மணமகளுக்கவன் மன்மதன்போலும் (மதி)
6 எட்டிப்போ—போவென்னும் வீடு—கையைக்
கொட்டிவா வாவென்று கூப்பிடுங்காடு (மதி)
7 பாழுடல் மாமிச மூட்டை—இது
வீழப்பல ஜெந்துவுக்கு நல்வேட்டை (மதி)
8 கும்பியுடல் புகை யோட்டம்—இதை
நம்பியிருக்குமே நாய் நரிக்கூட்டம் (மதி)
9 தங்கமும் வெள்ளியுமண்ணே—என்றும்
மங்காத மோக்ஷத்தின் வாழ்வை நீ யெண்ணே
(மதி)
10 தனமிருந்தா லிறவோமோ—தூங்கும்
கனவிற்கண்ட வாழைக்காய் கறிக்காமோ (மதி)

(வரும்)

(வேதநாயகம் பிள்ளை பெண்மதி மாலை)

ஹாஸ்யம்

ஒரு சைவன் ஒரு வைஷ்ணவருடைய கோயிலுக்கு மேளங் கொட்டும் வேலைக்காக மனுச் செய்து கொண்டான். கோயிலதிகாரி, "நீ நாமம் போட்டுக் கொண்டாலன்றி உனக்கு இந்த வேலை கிடைக்காது" என்று கூறி, "வர விருப்பமிருந்தால் நாளைக்கே வந்து வேலை செய். ஆனால் நாமம் போட்டுக் கொண்டுதான் வர வேண்டும்" என்றார்.

சைவன் — "நல்லது — அப்படியே" என்று கூறிச் சென்று மறுநாள் வயிற்றில் பெரிய நாமம் போட்டுக் கொண்டு நெற்றியில் திரிபுண்டரம் தீட்டிய வண்ணம் வந்து மேளங் கொட்டினான். அவனைக் கண்ட அதிகாரி, "இது என்ன விநோதம்! இப்படியொரு வேஷமா?" என்று கேட்டார்.

சைவன்—"ஸ்வாமி, வயிற்றுப்பாட்டிற்காக நாமம் போட வேண்டியிருப்பதனால் வயிற்றுக்கு நாமம் போட்டுக்கொண்டேன். மத வழக்கப்படி நெற்றியில் திருநீறணிந்தேன்"—என்றான்.

கோயிலதிகாரியும் மற்றவர்களுங் கேட்டுக் குலுங்கக் குலுங்க நகைத்தார்கள்.

இன்றைக்கும் ஸ்ரீரங்கம் போன்ற பெரிய விஷ்ணு ஸ்தலங்களிலே வயிற்றுப் பிழைப்பிற்காக நாமம் போட்டுக்கொண்டு பிழைக்கும் சைவர்களிருக்கின்றார்

கள். ஆகா!—வயிற்றின் கொடுமை இது ஒன்றைத் தானா செய்யச் சொல்லும்? வயிற்றின் கொடுமையால் இராமநாதன், பார்த்தசாரதி, தண்டபாணி — இவை போன்ற அழகிய பெயர்களை நாதன், சாரதி, பாணி— எனக்குறைத்துக் கொள்வதுடன் ஆங்கிலேயர் போல் தொப்பியும் அரக்கை, அரைக்கால் சட்டையும் போட்டுக்கொண்டு ஜாதியாசாரத்தை மறந்து உலாவும் விநோதத்தை நாம் பார்க்கிறோமல்லவா?

(2) ஓர் ஊரில் இரண்டு ரொட்டிக் கடைக்காரரிருந்தார்கள். அவர்களுக்குள் வியாபாரப் போட்டி ஏற்பட்டது. ஒருவன் இன்னொருவனைவிட மலிவாய் விற்றுக் கிராக்கி தேடிக் கொள்ளக் கருதி, மாவுக்கிடங்கிலிருந்து மாவு மூட்டையைத் திருடி வந்து ரொட்டி சுட்டு அணாவுக்கு இரண்டு ரொட்டி யென்பதை நான்கு ரொட்டியாக விற்று வந்தான்.

இதைக் கண்ட அவன் நெடுநாள் ஆலோசித்து "நாம் அணாவுக்கு ஆறு ரொட்டியாக விற்று இவன் வாயில் மண் போட வேண்டும்" என்று கருதி — ரொட்டிக் கிடங்கிலிருந்து ரொட்டிகளையே திருடிக் கொண்டுவந்து அணாவுக்கு ஆறு ரொட்டி வீதம் விற்றான்.

இதைக் கண்டு முன்னவன் ஆச்சரியப்பட்டு ஒரு நாள் அவனைச் சந்திக்க நேரிட்ட போது—"அண்ணே, நான் மாவை மூட்டைமூட்டையாய்த் திருடிக்கொண்டுவந்து ரொட்டி சுட்டு விற்கிறேன். எனக்கே நான்கு ரொட்டி வீதம் விற்றால் நஷ்டமுண்டாகிறதே;

நீ யெப்படி ஆறு ரொட்டி வீதம் விற்கிறாய்? — என்று கேட்டான்.

அவன் அதைக்கேட்டு நகைத்து, "அப்படியா; நான் ரொட்டிக் கிடங்கிலிருந்து ரொட்டிகளையே திருடிக் கொண்டு வந்து விடுகிறேன். அதனால் அணவுக்கு ஆறு ரொட்டி விற்கிறேன்" — என்றான்.

இருவரும் இப்போது தாங்கள் செய்த செய்கை புத்தியீனமான செய்கையென்பதை யுணர்ந்து நியாய வழியிலே வியாபாரம் செய்யத் தலைப்பட்டனர்.

(3) பாரதம் கேட்க வந்த பாட்டி யொருத்தி தனக்கு எல்லாந் தெரியுமென்று காட்டிக்கொள்ளக் கருதி— "துரியோதனன் திரௌபதியைக் கல்யாணம் செய்து கொண்டானே அந்தக் கதைதானே இது? இதை ஒருவர் வாசிப்பதும் பலர் கேட்பதும் எதற்கு? யாருக்குத் தெரியாதிந்தக் கதை?" என்றாளாம்.

(மாணவன்)

பாவத்தின் சம்பளம் மரணம்—என்று கிறிஸ்துவ வேதம் கூறுகின்றது.

இன்றைக் கிருப்பாரை நாளைக்கிருப்பர் என்றெண்ணவோ திடமில்லையே—என்று தாயுமானவர் கூறியுள்ளார்.

ஒருவனுக் கொருவன் மனத்தாலும் தீங்கு நினைப்பதில்லை. ஒருவனுக் கொருவன் பயப்படுவதுமில்லை—என்று ஒரு புதுக்கட்டுப்பாடு செய்து கோள்வோமே!" என்றார்.

ஸி. பாரதியார்

மதுக்குடி ஒதுக்கு
குடும்ப மது விலக்கு சாஸ்திரம் போதிப்பது.

இராகம் பியாகு. ரூபக தாளம

பல்லவி

தாகமுள்ளோனே இதோ—தண்ணீர் இருக்கிறது
தாகந் தீர்த்துக்கொள்ள நீ வா-வா-வா (ஓ)

அநுபல்லவி

தாகந்தீர்க்கத் தண்ணீர்தான் வேண்டும்
தாகம் போக்க வெந்நீரும் போதும்
சோகம் தீர்ப்பது தண்ணீர்
தேகம் ஏற்பது நன்னீர்
பானம் பண்ணிச் சோதித்துப் பார் பார் (ஓ)

சரணங்கள்

1 கள்ளுக் கடைக்கு நீ போய், கள்ளுக் குடுவை தூக்கி
கள்ளேன் நீ குடிக்கிறாய்? சொல் சொல் சொல்
புளித்து நுரைத்த கள் குலைத்து விடும் மானம்
மதிகெடுக்கும் இது மெய் மெய் மெய்
புளித்துப்போன பனங்கள்ளும் களித்துப்போன
தென்னங்கள்ளும்
ருசித்தால் தலைக்கேறும் குடித்தால் கூத்தாட்டம்
குடுவையை விட்டோடிப் போ போ போ (ஓ)

2 சாராயக் கடைக்குப் போய்ச் சாராயப் புட்டி தூக்கி
சாராயங் குடிப்பதேன் சொல் சொல்
காய்ச்சி வடித்த மது சாய்த்துப்போடுங் குடித்தால்
வேர்த்து விழுவாய் இது மெய் மெய் மெய்
யார்க்கு ரத்தங்கலங்கின கண்? யார்க்குக் காரண
மில்லாக் காயம்?
யார்க்குப் புலம்பல் சண்டை யார்க்குத் துக்கம்
வேதனை
சாராயம் நாடுவோர்க்கே — ஐயையோ (ஓ)
3 ஜொலிக்கும் ஷாப்புக்குள் பளிங்குப் பாத்திரத்தில்
குடித்த பானம் என்ன? சொல் சொல் சொல்
பிடித்துக்கொள்ளும் உன்னை உவிஸ்கி ஜின் பிராந்தி
எரித்துவிடும். இது மெய் மெய் மெய்
ஏல்ஸ்றவுற்று, ஏற்கா உனக்கு
ஷெரிபோர்ட் கிலாரெட் ஷாம்போன் ஆகா
பேரும்போம் குறி சொன்னேன் — கேள் - கேள்
கேள் (ஓ)

பர்மாவில் பூகம்பம்

இம்மாதம் 3-ந்தேதி இரவு பர்மாவில் பையுண்ட ஸாவுக்கும் டோங்குவுக்கும் மிடையில் பயங்கர பூகம்பத்தால் மிகுந்த சேத மேற்பட்டது. பையூ என்னு மிடத்தில் ரயில் பாதை உடைப்பெடுத்துக் கொண்டதுடன், கோர்ட்டு கட்டடம், இரண்டு ரயில்வே பாலங்கள் உள்பட சுமார் 20 கட்டடங்கள் அழிந்து போய் விட்டன. இந்த பூகம்ப அதிர்ச்சி பர்மா முழுவதுமே இருந்ததாகத் தெரிகிறது. ஆனால் பையூவில்தான் அதிக நஷ்டம். 36-பேர் இறந்து போனதுடன் பலருக்குக் காயம் பட்டிருப்பதாகத் தெரிகிறது. பெகுவில் 45-நிமிஷ நேரம் பூமி ஆடிக்கொண்டிருந்தது. ரங்கூனிலிருந்து 10-மைல் தூரத்திலுள்ள ஒரு ஊரில் திருவிழா நடந்ததால் அங்கு போடப்பட்டிருந்த கடைகளெல்லாம் பூகம்ப அதிர்ச்சியால் விழுந்து விட்டன. பையூ ஸ்டேஷனில் இரவு ஒன்றரை மணிக்குப் பல கூட்ஸ் ரயில்கள் குடை சாய்ந்தன.

சுகாதாரம்

நீரைச் சுருக்கி யுண் - என்றும், **மோரைப் பெருக்கியுண்** - என்றும் **நெய்யை யுருக்கியுண்** என்றும் - பெரியார் கூறியிருக்கிறார்கள். ஆதலினால் நீரைக் காய்ச்சி யுண்டவர்க்கும் மோரை நீர் விட்டுப் பெருக்கி எலுமிச்சம்பழம் பிழிந்து கறிவேப்பிலை கிள்ளிப் போட்டுப் பெருங்காயம் விட்டுக் கடுகு தாளித்து வார்த்துக் கொள்பவர்க்கும் நெய்யை உருக்கி உண்பவர்க்கும் நோய் வாராதென்று தெரிகின்றபடியால் — ஒவ்வொரு வீட்டாரும் சர்வ சாதாரணமான இச்செய்கையைச் செய்து கொள்ளச் சோம்புவது கூடாது.

பிள்ளைகள் தங்கள் அன்னையிடம் கட்டித்தயிர் வேண்டுமென்றழுவதும் கெட்டி நெய் வேண்டுமென்று பிடிவாதம் பிடிப்பதும் வெந்நீர் அருந்த மாட்டேனென்று வீண் வம்பாடுவதும் பெரிய பிழையாகும்; தாய் தந்தையர் இப்படிப்பட்ட பிடிவாத குணங்கண்டபோது பிள்ளைகளைக் கண்டிக்க வேண்டும். அவர்கள் மனம்போனபடி விட்டுவிடுவது கூடாது. அநேக வீடுகளில் தாய் தந்தையரே இப்படிப்பட்ட பிடிவாத குணங்கள் பிள்ளைகளுக் குண்டாகும்படி அவர்களை வளர்க்கிறார்கள்; அதாவது அருமை பாராட்டுகிறார்கள். இந்த அருமை பிள்ளைகட்குத் தீமை தருமென்பதை அவர்களுணர்வதில்லை. அது கூடாது.

குழந்தைகள் அழுதால் சர்க்கரையைக் கொடுப்பதும் காசு கொடுத்து வாங்கித் தெருக்கடையில் விற்

கும் திண்பண்டங்களை யுண்ணும்படி செய்வதும் பெற்றோர்கள் பிள்ளைகட்குத் தீமையே செய்வதாகும்.

பிள்ளைகளே ! நீங்கள் நச்சுத் தீனி தின்பதற்கும் வேளை தப்பி வேளை யுண்பதற்கும் தெருவில் விற்கும் பண்டங்களை வாங்கி யுண்பதற்கும் விரும்பாதீர்கள். அப்பண்டங்கள் ஈயும் கொசுவும் மொய்த்துக் கெட்டுப் போனவைகளாயிருக்கும், அல்லது ஊசிப் போயிருக்கும். நீங்கள் எப்போதும் உங்கள் வீட்டில் உங்கள் அன்னை தந்தையாரால் செய்யப்பட்ட தின்பண்டங்களை அவர்கள் விரும்பிக் கொடுக்கும்போது பெற்று உண்ணுங்கள்.

பிறர் வீட்டிற் செய்துள்ள தின்பண்டங்களில் நீங்கள் ஆசை வைப்பது கூடாது. அந்தத் தின்பண்டங்கள் உங்களுடம்புக்கு ஆகாதனவா யிருக்கலாம். ஆதலால் அவைகளில் ஆசை வைப்பது கூடாது. உங்கள் தேகத்துக்காகக் கூடிய தின்பண்டங்கள் இவையென்பதை உங்கள் தாய்மார் அறிவார்களாதலால் அவர்கள் செய்து தருவதையே நீங்கள் புசிக்க வேண்டும்.

இப்படிப்பட்ட நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்வீர்களானால் நீங்கள் நோய்களுக்கு ஆளாகாமல் சுகமாக வாழலாம். "நோயற்ற வாழ்வே வாழ்வு" என்று பழமொழி வழங்குவதைக் கவனியுங்கள்.

கொடிய பாவம்

(1) வண்டி மாடுகளையோ வண்டிக் குதிரைகளையோ அவைகளின் சொந்தக்காரன் கருணையின்றி அடிக்கும் ஒரு செய்கை கண் கொண்டு பார்க்க முடியாத ஒரு கொடிய பாவம்.

(2) தன் அன்னை தந்தையரையும் உற்றார் உறவினரையும் விட்டுத் தன்னை அக்கினி சாட்சியாக மணந்த புருஷனையே கதியாக அடைந்த ஒரு ஸ்திரீயைக் கணவன் கருணையின்றி அடித்து, மிருகத்தினும் கேடாக நடத்தும் ஒரு செய்கை கொடிய பாவம்.

(3) தூண்டிலில் இரையைக் கட்டி ஆற்றிலோ குளத்திலோ போட்டு மீன்களைப் பிடிக்கு மொரு செய்கை சகிக்கமுடியாத கொடிய பாவம்.

(4) தன் மகனுக்கும் தன் குலத்துக்கும் இதந்தர வந்த மருமகளைக் கொடுமைக்குள்ளாக்கும் மாமியினுடைய செய்கை கொடிய பாவம்.

(5) மனைவியின் பேச்சைக் கேட்டுக் கொண்டு தாயைத் தாழ்மைக்கும் அவமானத்துக்கும் தொந்தரவுக்கும் உள்ளாக்கும் மகனுடைய செயகை கொடிய பாவம்.

(6) தமையன் மனைவியோ தம்பி மனைவியோ தன் கொழுந்தன் அல்லது மைத்துனன் மக்களுக்குப் பந்தி வஞ்சனை செய்வது கொடிய பாவம்.

(7) ஏழைகள் வருந்தக் கண் கொண்டு பார்த்து நமக்கென்னவென்று நினைப்பது கொடிய பாவம்.

(8) ஏழையினுடைய அழுக்குத் துணியையும் அழுக்கு உடம்பையும் சிறைக்காத முகத்தையும் பார்த்துப் பொருளாளி அவ்வேழைகளைப் பன்றி, நாய், மாடுகளை விடக் கீழான ஐந்துவாகக் கருதுவதுண்டு. அது கொடிய பாவம்.

(9) நன்றாய்ச் சமைக்கப்படாத உணவையும், நன்றாய் மூடிவைக்கப்படாத உணவையும், ஊசிய உணவையும், ஏழைகளுக்கும் வேலைக்காரர்களுக்கும் போடும் வழக்கம் சில பணக்காரர்களுடைய வீட்டிலிருந்து வருகிறது. இது கொடிய பாவம்.

(10) ஏழை மாமனாரை இம்சித்துப் பொருள் பறிக்கும் மாப்பிள்ளையின் செய்கை மேற் கூறிய பாவங்களை யெல்லாம் விடக் கொடிய பாவம்.

பழமொழிகள்

1. அகதிக்குத் தெரியுமா அடிசிலின்சுவை?
2. குருடனறிவானோ குவலயக்காட்சி?
3. தவளையறியுமோ தாமரையின்மணம்?
4. உரலில் அகப்பட்டது உலக்கைக்குத்தப்புமா? அதுபோல ஸம்ஸாரசாகரத்தில் விழுந்தவன் சங்டப் படாமல் கரையேற முடியுமா?
5. சிவபெருமான் திருமுடியிலிருக்கும் பாம்பு கருடனுக் கஞ்சுமோ? அஞ்சாது. அதுபோல் நல்ல சார்படைந்த எளியவன் ஊர்மிரட்டினுக் கஞ்சான்.
6. விளக்கைப் பிடித்துக் கொண்டே தூணில் முட்டிக் கொள்வாரு முண்டு.
7. சாந்தம் என்கிற குணத்தை யுடையவனுக்குத் தரணியில் பகைவரு முண்டோ?

ஸ்ரீ

பகவானுடைய

திருநாம வைபவம்

ஸ்ரீ தொண்டரடிப் பொடிய ரென்னும் வைஷ்ணவப் பெரியாரொருவர் ஸ்ரீ ரங்கநாதனைச் சேவிக்கும் போது அப் பெருமானை நோக்கி "பகவானே! உமது அடியார்களாகிய நாங்கள் எங்கள் புலன்களைக் காவலில் வைக்கச் சக்தி பெற்றிருந்தும் அவ்வாறு காவல் இல்லாதபடி சுயேச்சையாகத் திரியவைத்து அவ்வழியைக் கொண்டே கலிபுருஷனது ஆரவாரத்தைக் கீழ்ப்படுத்தி எமனுடையவும் அவன்றன் ஏவலாளருடையவும் தலைமீது காலிட்டு நடக்கத்துணிந்து அவர்களைப் பரிகசித்துச் சஞ்சரிக்கலானோம்" என்றார். இவ் வார்த்தையைக் கேட்ட பகவான் "ஆம் கொண்டவன் பலமிருந்தால் கூரை யேறிப் போரிடலாம். நம் அருளாலன்றோ உமக்கு இப் பராக்கிரமம் ஏற்பட்டது?" என்றார். அடியார், "அல்ல, அல்ல தேவரீருடைய தயவை எதிர் பாராமலே அக்காரியஞ் செய்யும் திறமை பெற்று விட்டோம்" என்றனர். பகவான் "அது வெறும் பேச்சு" என்றார். அடியார் "பொய் பேசிச் சமாளிக்கும் பழக்கம் தேவரீருக்குண்டு. எங்களிடம் பொய்யுரை மருந்துக்கும் கிடைப்பதரிது" என்றார். பகவான் "அப்படியாயின் பின் எப்படி அசாத்தியம் சாத்தியமாகக் கூடும்?" என்றார்.

அடியார்:—"அதுதான் ரகசியம்" என்றார்.

பகவான்:—"அந்த ரகசியத்தை நாம் அறியலாகாதோ?"

அடியார்:—"தேவரீர் அறிய விரும்புகிறீரோ?" என்றார்.

பகவான் "ஆம்" என்றார்.

அடியார்,

"காவலிற் புலனை வைத்துக்
  கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து
நாவலிட் டுழிதர்கின்றோம்
  நமன்தமர் தலைகள் மீதே
மூவுல குண்டுமிழ்ந்த
  முதல்வநின் நாமங் கற்ற
ஆவலிப்புடைமை கண்டாய்
  அரங்கமா நகருளானே."

பிரம்ம லோகத்தினின்றும் பூலோகத்தை வாழ்விக்க அயோத்திக்கு வந்து அங்கிருந்து ஸ்ரீ ரங்கத்தில் திருக்கோயில் கொண்டருளிய எம்பெருமானே! ஆதி மத்ய பாதாள மென்னும் மூன்று லோகங்களையும் பிரளய காலத்தில் அதற்கிரையாகாதபடி திருவயிற்றிற் கொண்டு பாதுகாத்து, சிருஷ்டி காலத்தில் வெளிப் படுத்தும் முதற்பெருந்தேவே! தேவரீரது திருநாமத்தை யுச்சரிக்கக் கற்றுக்கொண்ட மகத்துவத்தாலல்லவோ செய்தற்கரிய செயலையும் செய்யும் பாக்கியத்தைப் பெற்றோம்? நாமோச்சாரண பக்தியின்பத்திற்கு ஸ்ரீ மகாலக்ஷ்மியின் வாசஸ்தானமாகிய வைகுந்த இன்பமும் ஒப்பாகாதே - ஆகையால் அடியேன்,

"பச்சைமா மலைபோல் மேனி
  பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே
  ஆயர்தங் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
  இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
  அரங்கமா நகருளானே"

என்றார்.

பகவான் சந்தோஷித்து "அவ்வாறே செய்க" வென்றருள் புரிந்தார்.

சாமார்த்திய திருடனின் ஜாலம்

காளிபாத பாஸ்க் என்பவனும் மற்றிருவரும் 3 வயது சிறுவனிடமிருந்து கழுத்துச் சங்கிலியைத் திருடியதாக சீல்டா போலீஸ் நியாயாதிபதி முன்பு குற்றஞ் சாட்டப்பெற்றனர். அந்த மூன்று எதிரிகளும் திருட்டு நடந்த சிறிது நேரத்திற்கெல்லாம் கைதியாயினர். ஆனால் அவர்களிடம் கழுத்துச் சங்கிலி இல்லை. காளிபாத பாஸ்க்தான் அந்தச் சங்கிலியை விழுங்கி விட்டதாக அறிவித்தான். எதிரியின் வயிற்றைக் கழுவிச் சங்கிலியை எடுக்கப்போலீசார் அவனைக் காம்பெல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பினர். ஆனால் அந்தச்சங்கிலி யகப்படவில்லை. எதிரியை எக்ஸ்ரே பரீட்சைசெய்து சங்கிலி உடலில் எங்கிருக்கிறதென்பதைத் தீர்மானித்து அதன்பேரில் ஆபரேஷன் செய்து அந்தப் பொருளை எடுக்கவேண்டுமென்று காளிபாத பாஸ்க்கை வைத்திய கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பினர். ஆபரேஷன் செய்யப்போகின்றனரென்பதால் பயந்து, எதிரி வைத்திய கல்லூரி ஆஸ்பத்திரிக்குப் போகும் வழியில் திடீரென்று தனது கழுத்தின் இரு பக்கங்களையும் அழுத்தினான். உடனே முகவாய்க் கட்டையின் கீழிருந்த செயற்கைப்பை யொன்றிலிருந்து சங்கிலி வெளி வந்தது.

இந்து நேசனின் இவ்வருஷ அநுபந்தம்

இந்து நேசன் என்னும் தமிழ் வாரப்பத்திரிகை தமிழுலகில் பத்திரிகை பரவத்தொடங்கிய கால முதலாக இருந்துவரும் ஒரு சிறந்த பத்திரிகையென்பதும் அதன் ஆசிரியர் - ஸ்ரீமான் - எல். அநந்தையர் என்பதும் தமிழுலகில் யாவரும் அறிவர்.

ஸ்ரீமான் - எல். அநந்தையர் அவர்கள் இடைவிடா முயற்சியுடையவராதலாலும் காலத்துக்கும் உலகத்தில் அறிஞர் விரும்பத்தக்கதும் ஏற்றுக் கொள்ளத் தக்கதுமான விஷயங்களெழுதும் ஆற்றலுடையவராதலாலும் மேற்படி பத்திரிகை மலை விளக்கென இலகுகின்றது.

ஐயர் அவர்களுடைய முயற்சி மேன்மேலும் பெருகி அவர் போதனைகள் தமிழுலகுணர்ந்துய்யச் செந்திலாண்டவன் திருவருள் புரிவானாக.

இவர்கள் வழக்கம்போல் இவ்வருஷமும் வெளியிட்ட இந்துநேசன் அநுபந்தம் வரப்பெற்று மகிழ்வெய்தினோம். இந்த அநுபந்தம் சிறந்த டிம்பிக்கடிதத்தில் முழுவளவில் 108 பக்கங்கள் கொண்டதாயிருக்கிறது. இதில் பல பெரியோர்கள் கட்டுரையெழுதியிருக்கின்றனர். அவையாவும் ஒரு முறைக்கு நான்கு முறை பார்த்து மகிழக்கூடிய அருமை பெருமையுடையவையாயிருக்கின்றன. அநேக பெரியார்களுடைய திருவுருவப்படங்களும் ஆலயங்கள் தெய்வங்கள் அரியபெரிய கட்டிடங்கள் இவைகளுடைய படங்களும் இதில் அடங்கியிருக்கின்றன. இது தமிழர் ஒவ்வொருவரும் வாங்கிப்படிப்பதற்குத் தகுதி வாய்ந்த ஒரு நூல்போல் விளங்குகின்றது. இதன் விலை ரூ. 1—0—0 வேண்டுவோர் மானேஜர், இந்துநேசன் ஆபீஸ், 665 அரண்மனைக்காரத் தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை—என்ற விலாசத்துக்கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

புத்தகவரவு

'இன்னிலை, என்னும் பெயர் கொண்ட ஒரு நூல் வரப்பெற்றோம். இதனைச் செய்யுள்வடிவில் இயற்றியுதவிய பெரியார் பொய்கையார் என்பவர். இவர் ஆழ்வார் பன்னிருவரில் ஒருவரென்று தெரிகிறது. இந்நூல் கீழ்க்கணக்கு, மேற்கணக்கு என்னும் பெயரால் தொடுக்கப்பட்டுள்ள பண்டைய நூல்களில் கீழ்க்கணக்கைச் சேர்ந்ததாகும்.

இஃது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் பற்றிக் கூறுகின்ற ஓர் அருமையான நூல். இது மக்கட்கு இன்றியமையாத அலந பூஷணமாக இலகக்கூடியது.

இந்தஅரிய நூலுக்கு ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் உரையெழுதியிருக்கிறார்கள். பிள்ளையவர்களைப்பற்றித் தமிழ் நாட்டில் அறியாதார் யாருமிலர். அவர்கள் நம நாட்டில் தேசபக்தியைப் பரவச் செய்தவர்களிற் சிறந்தவர்; தமிழ் பாஷையில் பற்றுடையவர்; தமிழ் நூல் பல ஆராய்ந்தபுலவர்: ஆங்கில பாஷையிலும் தேர்ச்சிபெற்றவர். இவர்கள் ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்துள்ள நூல்கள் மனம்போல வாழ்வு, மெய்யறம் என்னும் பெயருடன் விளங்குகின்றன.

இவர்கட்குத் தமிழில் செய்யுளியற்றும் ஆற்றலும் செய்யுட்கு உரையெழுதும் ஆற்றலும் உண்டு. இவர்கள் ஸ்ரீமான் செல்வகேசவராய முதலியார் ஸ்ரீமான் கனகசுந்தரம் பிள்ளை முதலியதமிழறிஞரொடு பழகியவர்.

இத்தகைய பெரியாராதலின் இன்னிலையென்னும் நூலுக்கு உலகம் குறைகூற எந்த விதமான ஓரிடமுமில்லாமல் தக்க ஆராய்ச்சியுடனும் மக்கட்கு எளிதில் விளங்கக் கூடிய விதத்திலும், பொழிப்புரை,

விசேடவுரை, கருத்துரை, இலக்கணக் குறிப்புகள் முதலியன எழுதியுள்ளார்.

இந்நூலின் அருமையறிந்து இதற்கு உரையெழுதப் பிள்ளையவர்கள் எடுத்துக் கொண்ட உழைப்பு, தமிழ் உலகுக்கு அவர்கள் செய்த பேருதவியேயாகுமாதலால் பிள்ளையவர்கள் நீடித்த ஆயுளுடனிருந்து இதுபோன்ற இன்னும் பல அரிய நூல்களை நமக்குதவச் செந்திலாண்டவன் திருவருள் புரிவானாக. இந்நூல் வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம. இதன் விலை ரூ. 1-0.0

சென்னை, அமிர்தாஞ்சனம் டிபோவிலிருந்து வழக்கம்போல் மகாத்மா காந்தி படம், வேறு அழகிய படங்களடங்கிய கியாலண்டர் வரப்பெற்றோம்.

விலாசம்.

வ. உ. சிதம்பரம் பிள்ளை,
கோயில் பட்டி S. I. Ry.
திருநெல்வேலி ஜில்லா,

Wise Sayings

1. A good book is a lasting companion.
2. Books are the companions of youth.
Books are the delight of old age.
Books are the ornament of prosperity.
Books are the refuge and comfort of adversity.
3. Some books are to be tasted, others are to be swallowed and some few to be chewed and digested.
4. A bad reaper blames the sickle.
5. All unskilful fools quarrel with their tools.
6. A boy is a boy; two boys are half a boy; three boys are no boy at all.
7. One may do something; two will waste time; three will do nothing.
8. One man will carry two buckets of water for his own use; two men will carry one for their joint use; but three men will carry none for any body's use.

21183

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்

வருட சந்தா தபாற் கூலி யுள்பட	இந்தியா, பர்மா, சிலோன் ...	ரூ. 1 8 0
	பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ...	ரூ. 2 0 0
தனிச்சஞ்சிகை	விலை	ரூ. 0 2 0

1. பத்திரிகைக்கு ஜனவரி௴ முதல் டிசம்பர்௴ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக் கொள்வதானல் அணா மூன்று அதிகமாய்ச் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால் தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம்மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலா... பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை ...ண்டும்.

...ந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் ...டமாட்டா.

விளம்பர விகிதம்

...ற்கு ஒரு மாதத்திற்கு	...ரூபா 10—0—0
...த்திற்கு ,, ...	ரூபா 5—0—0

...ண்டிராக்ட் ரேட்டானல் சகாயமுண்டு.

...:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
...23, திருவொற்றியூர் ஹைரோட், சென்னை.

அமிர்தாஞ்சனம்

1931 காலண்டர்கள் 1931

மிகப் பிரசித்திபெற்ற சித்திர நிபுணர்களால் மூன்று வர்ணத்தில் எழுதப்பெற்ற இரண்டு மாதிரியான ஸ்திரீயின் படங்களும், மஹாத்மாவின் படம் ஒன்றும் கிடைக்கும்.

விலை 3 காலண்டர்கள் 0—6—0

டஜன் ரூ. 1—4—0

100, ரூ. 9—8—0

தபால் செலவு வேறு, அணா 4-ம், 8-ம் ஆகும்.

50 காலண்டர் வரையில் பூரா தொகையை மணியார்டர் மூலமாவது அல்லது ஸ்டாம்பு மூலமாவது முன்பணமாக அனுப்பவேண்டும் 50-க்கு மேல்பட்ட ஆர்டர்களுக்கு பாதித் தொகை முன் பணமாக அனுப். அருகாமையிலுள்ள ரயில்வே ஸ்டேஷனு அனுப்பப்படும்.

அமிர்தாஞ்சன் டிப்போ

7, தம்புச்செட்டி தெருவு, சென்

Vavilla Press, Madras.